வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 19.06.2024 புதன்கிழமை இதழ் : 171 பக்கங்கள் : 12

# சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க முடிவெடுத்துவிட்டார் சுமந்திரன்

## தமிழ் தேசிய கட்சியின் சிறீகாந்தா

- சம்பந்தர் இப்போது செல்லாக்காசு
- அரசியல் சாராதவரே பொது வேட்பாளர்
- பொது வேட்பாளரால் தமிழருக்கு சாதகம்


யாழ்ப்பாணம், ஜூன் 19

**தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தான் அதனை முற்றாக எதிர்ப்பதாகவும் அதை நிச்சயம் தோற்கடிப்பேன் என்றும் கூறியிருக்கிறார். அதற்குக் காரணம் அவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரிப்பதற்கு ஏற்கனவே முடிவெடுத்துவிட்டார். இந்த விடயத்தில் சம்பந்தன் ஒரு செல்லாக்காசு - இப்படி கூறியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் - மூத்த சட்டத்தரணி என். சிறீகாந்தா.**

டான் தமிழ்ஒளி தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும் "ஸ்பொட்லைற்" நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பொது வேட்பாளர் விடயத்தில்



நாங்கள் ஓர் உறுதியான முடிவில் இருக்கிறோம். தமிழ்த் தரப்பில் இருந்து ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்துவது என்பதில் எந்த மாற்றமும் இல்லை. அந்தப் பொது வேட்பாளர் நிச்சயமாக ஓர் அரசியல் கட்சி சார்ந்தவராக அல்லது அரசியல் கலப்பு உள்ளவராக இருக்கமாட்டார். இந்த விடயத்தில் நாங்கள் மிகஅவதானமாக இருக்கிறோம்.

பொதுவேட்பாளராக

11

# ஐ. நா. மனித உரிமை பேரவையின் 56ஆவது கூட்டத்தொடர் ஆரம்பம்

ஜெனிவா, ஜூன் 19

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 56 ஆவது கூட்டத்தொடர் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ரூக் தலைமையில் கூட்டத் தொடர் ஆரம்பமானது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 56 ஆவது கூட்டத்தொடரில் காலநிலை மாற்றம், பலஸ்தீன போர், உக்ரைன் விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

நேற்று ஆரம்பமான 56ஆவது கூட்டத்தொடர்

11

# இரண்டு சட்ட மூலங்கள் அரசமைப்புக்கு முரண்!

## உயர்நீதிமன்றம் வியாக்கியானம்

கொழும்பு, ஜூன் 19

'பாலின சமத்துவம்' சட்டமூலம், இலங்கை தொலைத்தொடர்பு திருத்தச் சட்டமூலம் என்பன அரசமைப்புக்கு முரணானவை என்று உயர் நீதிமன்றம் வியாக்கியானம் அளித்துள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன சபைக்கு அறிவித்தார்.

நேற்று பாராளுமன்ற நடவடிக்கை ஆரம்பமானதைத் தொடர்ந்து உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட இரு சட்டமூலங்கள் தொடர்பான வியாக்கியானங்களை சபாநாயகர் மகிந்த

11

# ஜனாஸா எரிப்புக்காக முஸ்லிம்களிடம் சபையில் மன்னிப்பு கேட்ட ஜனாதிபதி!

கொழும்பு, ஜூன் 19

கோவிட் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் (சடலம்) எரியூட்டப்பட்டமைக்காக அந்த மக்களிடம் நேற்று பாராளுமன்றத்தில் மன்னிப்பு கோரினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று ஆற்றிய தனது பாராளுமன்ற உரையில்,

கோவிட் தொற்று பரவல் காலத்தில் தொற்றால் இறந்தவர்களின் உடல்களை அடக்கம்

11



# தமிழ் தேசிய கட்சிகளை ஒன்றாக நாளை சந்திக்கிறார் ஜெய்சங்கர்!

யாழ்ப்பாணம், ஜூன் 19

இன்றிரவு இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களை ஒன்றாக நாளைய தினம் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெறும். இதில், பங்கேற்க தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களுக்கு தனித்தனியாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அறியவருகின்றது.

எனினும், அனைத்து கட்சிகளின் தலைவர்களுக்கும் சந்திப்புக்கான நேரம் மாலை 5 மணி என்றே

11

# பௌத்த மத பாதுகாப்புக்கு உயர்நீதிமன்ற தீர்ப்பு சவால்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

பாலின சமத்துவ சட்டம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு பெண்களின் உரிமைகளுக்கும் பௌத்த மதத்தின் பாதுகாப்புக்கும் சவாலானது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் விசேட

11



# யாழ். இந்திய துணைத் தூதரகம் முன்பாக மீனவர்கள் போராட்டம்!

பா. பிரசன்னா

யாழ்ப்பாணம், ஜூன் 19

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இந்திய இழுவைமடி படகுகளை தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் முன்பாக நேற்று கடற்றொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"இந்திய அரசே எமது கடல் வளங்களை சூறையாடாதே - எம்மையும் வாழவிடுங்கள் என்று கோரிக்கையை முன்வைத்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின்

11

# சவால்களை தீர்ப்பதற்கு இந்தியா ஆதரவளிக்கும்

## இந்திய துணைத் தூதுவர் உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 19

மீனவர் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை தீர்ப்பதற்கு தொடர்ந்தும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் இந்திய அரசாங்கம் வழங்கும் என்று தம்மை சந்தித்த கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைமடி மீன் பிடியை தடை செய்யுமாறு வலியுறுத்தி

11




# மகள்களின் நிர்வாண படங்களை விற்ற தாய்!

முல்லைத்தீவு, ஜூன் 19

சிறுமிகளான தனது இரு பிள்ளைகளையும் நிர்வாணமாக ஒளிப்படம் மற்றும் காணொலி எடுத்து பலருக்கும் அனுப்பி பணம் பெற்ற தாயாரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர் 34 வயதானவராவார். இவர்

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை தாமதப்படுத்தி வருவது பல்வேறு கோணங்களில் பார்க்கப்பட்டு வருகின்றது.

அரசமைப்பு சட்டத்துக்கு கொண்டுவரப்பட்ட திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. அதனால்தான் மைத்திரிபால சிறிசேன ஐந்து ஆண்டுகளில் தேர்தலை அறிவிக்க வேண்டியதாகியது.

ஆனால், அந்தத் திருத்தத்தை செய்தபோது விட்ட தவறு ஒன்று - இது தெரிந்தே விடப் பட்டதா அல்லது தவறுதலாக நிகழ்ந்ததா என்பது தெரியவில்லை. ஆனால், ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிந்த பின்னர் அதனை நீடிக்க வேண்டுமானால், அதற்காக சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவேண்டும் என்ற பகுதியில் ஜனாதிபதி தனது பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளின் பின்னர் நீடிக்க விரும்பினால் அதற்காக சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று முன்னர் இருந்தது - அப்படியே விடப்பட்டுவிட்டது. அதிலும் ஆறு என்பது ஐந்து என்று மாற்றப்பட்டிருக்கவேண்டும். அதனால், இந்த சரத்தை வைத்துக்கொண்டு பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றின் மூலம் தனது பதவிக்காலத்தை ஆறு ஆண்டுகளாக மாற்றலாமா என்று ரணில் யோசிக்கிறாரென செய்திகள் அரசல்புரசலாக கசிய விடப்பட்டன. அப்படிச் செய்வதென்றாலும் அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படும். அதனை இன்றுள்ள நிலையில் ரணிலால் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது தெரியவில்லை.

பாராளுமன்றத்தில் இருப்பவர்களின் ஆதரவை பெறுவதற்காகவே ஜனாதிபதியின் பதவிக் காலத்தை மாத்திரமன்றி, பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தையும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்கும் யோசனையையும் ரணில் தெரிவித்தார் என்றும் அது தொடர்பாக பல்வேறு தரப்புகளுடனும் பேசப்பட்டு வருவதாகவும் தமிழ் கட்சி ஒன்றின் தலைவர் கூறினார். ஆனாலும், அது சாத்தியமாகாது என்றே பல்வேறு தரப்புகளும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

ஆனால், இதுவே ரணில் தான் போட்டியிடுவதான அறிவிப்பை வெளியிடுவதற்கு தாமதம் இல்லை என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

ஏற்கனவே ஒரு தடவை இந்தப் பத்தியில் கூறியதுபோல, தற்போது 2 இலட்சம் காணிகள் அற்ற மக்களுக்கு காணிகளை வழங்கும் உறுமய திட்டம் போன்ற நலத்திட்டங்களை செய்யமுடியாமல் போய்விடும் என்பதும் அவர் போட்டியிடுவதை அறிவிப்பதை தாமதப்படுத்துவதற்கு காரணம் என்று கூறப்பட்டாலும் - அதைவிட முக்கியமானது, மகிந்த தரப்பினரின் ஆதரவை பெறுவதா இல்லையா என்பதை முடிவெடுக்க முடியாமல் இருப்பதே என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

மகிந்த தரப்பிலிருந்து ஏற்கனவே ரணிலுடன் இணைந்திருக்கின்ற முக்கிய தலைவர்கள் பலரும் - அவர்களும் தத்தம் மாவட்டங்களில் கணிசமான வாக்குவங்கியை வைத்திருப்பவர்கள்தான். மகிந்த தரப்பின் வேட்பாளராகவோ அல்லது அவர்களின் ஆதரவுடனோ போட்டியிடுவது அவருக்கு சாதகமானது அல்ல. அது சிறுபான்மையினரின் வாக்குகளில் சேதாரத்தை ஏற்படுத்தும் என்று வாதிட்டு வருகின்றனராம்.


ஆனால், நாடு முழுவதிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருந்த வலையமைப்பு. அதாவது, தேர்தல் நடத்துவதற்கு தேவையான கிராம மட்ட அமைப்புகள் அனைத்தும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் சென்று விட்ட நிலையில், ஒரு தேர்தலை சந்தித்து அதற்காக நாடு பூராகவும் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு தமது பிரதிநிதிகளை நியமிக்கக்கூடிய வலையமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியிடம் தற்போது இல்லை.

இதனாலேயே சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவை பெறவேண்டிய கட்டாயத்தில் ரணில் இருக்கிறார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள். அந்த இழுபறி நிலையே அவர் தேர்தலில் போட்டியிடுவது பற்றிய அறிவிப்பு வெளிவருவதில் தாமதத்தை ஏற்படுத்துகின்றதாம்.

ஆனால் அதேவேளை, பொதுஜன பெரமுனவுக்குள்ளும் இந்த விடயத்தில் ஓர் இழுபறி நிலை காணப்படுகின்றது என்கின்றன தெற்கு ஊடக வட்டாரங்கள். பெரமுன, ரணிலை ஆதரிப்பது என்று முடிவெடுத்துவிட்டால், (பெரும்பாலும் மகிந்த ராஜபக்ஷ அப்படியொரு முடிவை எடுத்துவிட்டதாகவே சொல்லப்படுகின்றது) பெரமுனவில் உள்ள முக்கிய தலைவர்கள் மாத்திரமன்றி, ஒட்டுமொத்தமாகவுள்ள "தலைகளும்" ரணிலின் பக்கம் போய்விடுவார்கள். அப்படியொரு நிலை வருகின்றபோது பெரமுனவில் ராஜபக்ஷர்கள், நாமல், சமல், அவர் புதல்வர் என்று ஒருசிலர் மாத்திரமே எஞ்சுவார்கள் என்றும் அதனால் கட்சியே காணாமல் போய்விடும் எனவும் அது தனது எதிர்கால அரசியலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் நாமல் ராஜபக்ஷ தொடர்ந்து தனது தந்தையிடம் வலியுறுத்தி வருகிறார் என்று பெரமுன வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவும் ரணிலின் அறிவிப்பு தாமதத்துக்குக் காரணமாக இருக்கலாம்.

- ஊர்க்குருவி.



வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் பெருந்திருவிழாவில் பூந்தண்டிகை திருவிழா நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற தருணம்...!

# ரயில் நிலைய அதிபர்கள் தொடர்ந்து போராட முடிவு

கொழும்பு, ஜூன் 19

தமது கோரிக்கைகள் தொடர்பில் அறிவிக்கப்பட்டபடி நேற்றைய தினம் கலந்துரையாடல் முன்னெடுக்கப்படாத மையால் திடீர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

முன்னதாக, ஐந்து வருடங்களுக்கும் மேலாக பதவி உயர்வு வழங்குவதில் ரயில் நிலைய அதிபர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளமைக்கு உரிய தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், தமது கோரிக்கைகளுக்கு அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக ரயில் பொது முகாமையாளரும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சருமான லசந்த அழகியவண்ணவுடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் நேற்றுவரை அவர்களின் தொழிற்சங்க போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காரைநகர் கடற்பரப்பில் 4 இந்திய மீனவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 19

காரைநகர் கடற்பரப்பில் மீன் பிடித்த குற்றச்சாட்டில் 4 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நால்வரும் காரைநகர் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டனர். அவர்களின் படகையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

கைதான மீனவர்களை நீரியல் வளத்துறை திணைக்களத்தினர் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ஐ)

## போதைப்பொருள் விற்பனை; பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, ஜூன் 19

ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தார் என்று கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேகநபர் அநுராதபுரம் பிள்ளையார் சந்தி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் , மிகிந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதான பொலிஸ் கான்ஸ்டபிளே கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் மரணம்!

முல்லைத்தீவு, ஜூன் 19

விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

முள்ளியவளையை சேர்ந்த சிறீஸ்கந்தராசா அரவிந்தன் (வயது - 27) என்பவரே நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

முத்துஐயன்கட்டில் கூலி வேலைக்காக வந்த குறித்த நபர் கடந்த 10 ஆம் திகதி வேலை முடிந்து வீதியில் நடந்து சென்றபோது மோட்டார் சைக்கிளில் வந்த 17 வயது இளைஞர் அவரை மோதியுள்ளார்.

இதில் இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்தார். அவர், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்திய இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

## குருந்தூர்மலையில் நேற்று வழிபாடு!

முல்லைத்தீவு, ஜூன் 19

குருந்தூர்மலை அமைந்துள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் நேற்றைய தினம் ஆலய நிர்வாகிகள் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இந்த வழிபாட்டில் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன், வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஞா.யூட்சன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தொல்லியல் துறையினரின் அறிவுறுத்தலுக்கமைய சேதம் ஏற்படுத்தாத வண்ணம் வழிபாடுகள் இடம் பெற்றிருந்தன. (ஐ)

## நூல் அறிமுகமும் உரையாடலும்!

யாழ்ப்பாணம், ஜூன் 19

எழுத்தாளர் எழிலின் படைப்பில் உருவான "பின் முள்ளிவாய்க்கால்" புத்தகம் அறிமுகமும் உரையாடலும் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழ் சிவில் சமூக அமையத்தின் அனுசரணையில் "கலம்" கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
19.06.2024 புதன்கிழமை
குரோதி வருடம், வைகாசி 05

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணிலின் எச்சரிக்கையின் பின்னணி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னாரில் நின்றவாறு ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது, அடுத்த ஐந்து ஆண்டுகளில் முன்னெடுக்கப்படும் பொருளாதார கொள்கைகளே நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும். இந்த விடயத்தை மன்னாரில் வைத்து குறிப்பிடுவதற்கு பின்னால் இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அண்மைக்காலமாக மன்னாரில் அதானி குழுமத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் பசுமை அபிவிருத்தி முதலீடுகளுக்கு எதிரான கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஜனாதிபதி ரணிலின் மன்னார் பயணம் நிகழ்ந்திருந்த அதேவேளை வடக்கு மாகாணம் பசுமை அபிவிருத்தி முதலீடுகளுக்கு மிகவும் உகந்த இடமாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது. எனவே, இவ்வாறான திட்டங்களை எதிர்ப்பதற்கு மாறாக எவ்வாறு உச்சமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்னும் கருத்தையே ரணில் மறைமுகமாக வலியுறுத்தியிருக்கின்றார். இரண்டாவதாக அவர் குறிப்பிடும் விடயம் மூலம் ஒரு மறைமுக எச்சரிக்கையை விடுத்திருக்கின்றார். அதாவது, அடுத்த ஐந்து ஆண்டுகள் இந்த நாட்டின் ஆட்சி அதிகாரம் என்னிடம் இல்லாது விட்டால் நீங்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வீர்கள்.

முன்னர் ஏற்பட்டவாறான மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்வீர்கள். எனவே, நாட்டை இப்போதிருப்பது போன்ற நிலையில் கொண்டு செல்ல வேண்டுமாயின், நான் உங்களுக்குத் தேவை என்பதை மறந்து விடாதீர்கள். இதனை நீங்கள் மறந்தால் - நீங்களே பாதிக்கப்படுவீர்கள். இது ஒரு மறைமுகமாக எச்சரிக்கைதான்.

கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை நாசமாக்கினார் - ரணில் நாட்டை காப்பாற்றினார். இதுதான் ரணில் விக்கிரமசிங்கவிடமுள்ள அரசியல் முதலீடு. ரணில் திறமையானவர் என்பதை அவரின் அரசியல் எதிரிகளும் நிராகரிக்கமாட்டார்கள். ஆனால், ஒருவரின் திறமை மட்டும் அவர் அரசியலில் தலைவராகி விடுவதற்கு பயன்பட்டு விடுவதில்லை. ஏனெனில், வாக்காளர்களில் பெரும்பான்மையினர் அரசியல் சூட்சுமங்களை புரிந்து கொள்ளும் ஆற்றலில்லா மக்களாவர்.

சாதாரண மக்கள் - அவர்கள் எவ்வாறான அரசியல் சிந்தனையால் வழிநடத்தப்பட்டார்களோ மற்றும் தங்களின் அன்றாட வாழ்நிலையில் எவ்வாறான பிரச்னைகளை எதிர்கொள்கின்றனரோ அவற்றின் வழியாகவே சிந்திப்பார்கள்.

ரணிலின் அரசியல் வாழ்வில் இவ்வாறான சாதாரண மக்களின் மனதை வெற்றி கொள்வதில் இதுவரையில் அவரால் வெற்றிபெற முடியாமலேயே இருந்தது. ரணில் பற்றி ஒருமுறை எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிட்டிருப்பது மிகவும் சரியான கணிப்பாக இருக்கின்றதுபோலும் - அதாவது, "ரணில் ஒரு சிறந்த புத்திஜீவி ஆனால், அடித்தள மக்களின் செல்வாக்கை அவரால் அடைய முடியவில்லை."

இந்தச் சவாலை இம்முறை அவர் கடப்பாரா என்பதுதான் அவருக்கு முன்னாலுள்ள கேள்வி. இந்த சவாலை ரணில் எவ்வாறு எதிர்கொள்வார் என்பதற்கான பதிலாகவே அவர் தனது தேவையை நாட்டின் சவாலாக மாற்ற முற்படுகின்றார் போலும். ரணிலை சிங்கள மக்கள் புரிந்து கொள்வார்களா?

# ஊடகவியலாளர் மீது தாக்குதல் கண்டித்து இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 19

ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்து அவரின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து இன்று புதன்கிழமை போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண ஊடகவியலாளர்களின் சார்பில் யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி நள்ளிரவு ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டுக்கு சென்ற இனந்தெரியாதோர் வீட்டை தீயிட்டு எரித்து சொத்துகளுக்கு சேதம் விளைவித்திருந்தனர். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். எனினும், இதுவரை குற்றவாளிகள் யாரும் கைது செய்யப்படவில்லை.

தாக்குதலை நடத்தியவர்கள் தொடர்பில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் பொலிஸார் குற்றவாளிகளை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக வடக்கு மாகாண ஊடகவியலாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

(ஐ)

# தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கொழும்பு, ஜூன் 19

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் உறுப்பினர் ஒருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசமைப்பின் 155அ எனும் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாக, பாராளுமன்ற உறுப்பினராக, மகாண சபை உறுப்பினராக, உள்ளூராட்சி அதிகாரசபை உறுப்பினராக இருக்கும் எவரும் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு தகைமையுடையோராக இருக்கமாட்டார்கள்.

மேலும், ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு முன்பதாக, அரச சேவையில் அரச உத்தியோகத்தராக அல்லது நீதித்துறை உத்தியோகத்தராக இருந்த எவரும் அவரின் நியமனத்துக்கு முன்பதாக, அவ்வாறான நியமனம் செயலூக்கம் பெறுகையில், அவ்வாறான பதவிகளில் இருந்து நீங்க வேண்டும் என்பதுடன் அரச உத்தியோகத்தராக அல்லது நீதித்துறை உத்தியோகத்தராக மேலும் நியமிக்கப்படுவதற்கு தகுதியற்றவராவர்.

அதற்கமைய, www.parliament.lk எனும் பாராளுமன்ற இணையத்தளத்தில் 'தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கான உறுப்பினர்கள் நியமனம்' என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2024 யூலை 01 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில், "செயலாளர் நாயகம், அரசமைப்பு பேரவை - பணிமனை, இலங்கை பாராளுமன்றம், சிறீ ஜெயவர்த்தனபுர, கோட்டை." எனும் முகவரிக்கு அல்லது constitutional council@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாகக் 'தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்கள் நியமனம்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஐ)

## நெத்தலியாற்றில் நேற்று சடலம் மீட்பு!

கிளிநொச்சி, ஜூன் 19

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெத்தலி ஆற்றுப் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டது.


பிரதேச மக்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவையில் மு. அநாதரட்சகனின் "பின் தொடரும் வலி" சிறுகதைத் தொகுப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிமுகம் செய்து வைக்கப்பட்ட போது...!

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 19 புதன்கிழமை
குரோதி வருடம் - ஆனி 05
நல்ல நேரம் : 09.30 - 11.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : திரையோதசி




**மேடம்**
பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரை தருவார்கள். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. அமைதியான நாள்.

**மிதுனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனி திறமைகளை கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடிவரும். மேலதிகாரிகள் உங்களுக்கு உதவுவார்கள்.

**கடகம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. சூட்சமங்களை தாண்டி முன்னேறுவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**சிம்மம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. தலைமைக்கு நெருக்கமாவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். வெற்றி பெறும் நாள்.

**கன்னி**
கணவன்- மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உயரதிகாரியின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை இருந்து கொண்டே இருக்கும். வளைந்து கொடுத்துப் போவது நல்லது. இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டும் நாள்.

**விருச்சிகம்**
சில காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். போராடி வெல்லும் நாள்.

**தனுசு**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**மகரம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர்கள், உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள்.

**கும்பம்**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி ஆதரிப்பார். மனசாட்சிப்படி செயல்படும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். மறைமுக நெருக்கடிகள் நீங்கும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

# இந்திய இறையாண்மைக்கு சவால் விடுகிறது இலங்கை


## பா. ம. க. தலைவர் அன்புமணி கண்டனம்

சென்னை, ஜுன் 19

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை தொடர்ந்து கைது செய்து வருவது இந்திய இறையாண்மைக்கு விடப்பட்ட சவாலாகும்- இவ்வாறு பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு,

வங்கக்கடலில் கச்சதீவுக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழகம் புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டினத்தைச் சேர்ந்த 4 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர். மீனவர்களின் படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தமிழக மீனவர்களுக்கு



எதிரான சிங்களப் படையினரின் இந்த அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

வங்கக்கடலில் மீன்பிடிப்பதற்கான இரு மாத தடைக்காலம் கடந்த 15 ஆம் திகதிதான் முடிவுக்கு வந்தது. அதன்பின்னர் மீண்டும் மீன்பிடிக்கச் சென்ற இரண்டாவது நாளிலேயே தமிழக மீனவர்களை சிங்களக் கடற்படை கைது செய்திருக்கிறது. தமிழக மீனவர்களை கைது செய்வதையே சிங்களக் கடற்படை தொழிலாக வைத்திருக்கிறது என்பதை இதிலிருந்தே புரிந்து கொள்ள முடியும்.

தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக மீன்பிடித்து வரும் பகுதிகளில் மீன் பிடிப்பது அவர்களின் உரிமை. அதற்காக அவர்களை கைது செய்ய இலங்கை அரசுக்கு எந்த உரிமையும் இல்லை. அதையும் மீறி தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை தொடர்ந்து கைது செய்வது இந்திய இறையாண்மைக்கு விடப்பட்ட சவாலாகும். இலங்கைக் கடற்படையின் இந்த அத்துமீறலை இந்தியா அனுமதிக்கக் கூடாது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆதரவில்லை

## விஜயின் தமிழக வெற்றி கழகம்

சென்னை, ஜுன் 19

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆதரவு வழங்கப்போவதில்லை என்று நடிகர் விஜய்யின் தமிழக வெற்றி கழகம் கட்சி அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக வெற்றி கழகத் தலைவர், விஜய் கடந்த பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வெளியிட்ட கட்சி ஆரம்ப அறிவிப்புக்கான முதல் அறிக்கையிலேயே, எங்கள் கழகத்தின் அரசியல் நிலைப்பாடு குறித்து தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில், தமிழக வெற்றிக் கழகம் போட்டியிடாது என்றும், எந்தக் கட்சிக்கும் ஆதரவு இல்லை என்றும், தமிழக வெற்றி கழகத் தலைவர் விஜய்யின் அறிவுறுத்தலின் பேரில் தெரிவித்துக்கொள்கிறேன் என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (எ)

# "அ. தி. மு. க. பின்வாங்குகின்றது என்றால் பழனிச்சாமி தகுதியான தலைவர் இல்லை"

குன்றத்தூர், ஜுன் 19

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் அ. தி. மு. க. போட்டியிடாமல் பின்வாங்குகின்றது என்றால் முன்னாள் முதல்வரும் பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி அந்த கட்சியை வழிநடத்துவதற்குத் தகுதியான தலைவர் இல்லை என்பதை அவரது நடவடிக்கை உணர்த்தியிருக்கிறது என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் தெரிவித்தார்.

கருணாநிதி நூற்றாண்டு நிறைவு விழா, தி. மு. க. அரசின் மூன்றாண்டு கால சாதனை, மக்களவைத் தேர்தலில் சிறீ பெரும்புத்தூர் தொகுதியில் டி. ஆர். பாலு வெற்றி பெற்றதற்கான நன்றி அறிவிப்பு பொதுக் கூட்டம் குன்றத்தூரில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# அமைச்சர் மஸ்தானுக்கு மீண்டும் கட்சிப்பதவி கொடுத்தது தி. மு. க.

விழுப்புரம், ஜுன் 19

அமைச்சர் செஞ்சி மஸ்தானுக்கு தி. மு. க. கட்சியில் மீண்டும் பதவி கொடுக்கப்பட்டுள்ளது. விக்கிரவாண்டி தொகுதியில் சுமார் 20 ஆயிரம் முஸ்லிம்கள் உள்ளனர். இங்கு நடைபெறவுள்ள இடைத் தேர்தலை மையப்படுத்தியே இவ்வாறு கட்சிப் பதவி கொடுக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளராகவிருந்து வந்த அமைச்சர் மஸ்தானை கடந்த 11 ஆம் திகதி அப்பொறுப்பிலிருந்து விடுவித்து தி. மு. க. தலைமை உத்தரவிட்டது.

இதனையடுத்து தி. மு. க. கவில் முஸ்லிம்கள் ஓரங்கட்டப்படுவதாக சிலர் சர்ச்சையை கிளப்பினர். அத்துடன், விழுப்புரம் மாவட்டத்தில் அமைச்சர் பொன்முடியும் மஸ்தானும் இரு துருவங்களாக செயல்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் மஸ்தானை வடக்கு மாவட்ட செயலாளர் பதவியில் இருந்து நீக்கிய தி. மு. க. தலைமை தெற்கு மாவட்டச் செயலாளர் பொறுப்பில் பொன்முடியின் மகன் கௌதம சிகாமணியை நியமித்தது.

இதையும் சர்ச்சையாக்கிய வர்கள், மஸ்தானை ஓரங்கட்டி விட்டு பொன்முடிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது தலைமை என விமர்சித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களை இலக்குவைத்து கோட்டாபய அரசு செயல்பட்டது

## எதிர்க்கட்சி தலைவர் சாடல்

கொழும்பு, ஜூன் 19

**கோவிட் தொற்றால் மரணித்தவர்களை நல்லடக்கம் செய்ய முடியும் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்திருந்த நிலையில் அப்போது இருந்த அரசாங்கம் முஸ்லிம் மக்களை இலக்காகக் கொண்டு இனவாத அடிப்படையில் செயல்பட்டு சடலங்களை எரிப்பதற்கு தீர்மானித்திருந்தது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ஆற்றிய விசேட உரையில் கோவிட் தொற்றில் மரணித்தவர்களின் சடலங்களை எரிப்பதற்கு எடுத்த தீர்மானம் போன்று எதிர்காலத்தில் அவ்வாறான பிழையான தீர்மானங்களை தவிர்க்கும் வகையில் புதிய சட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த கருத்து தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

கோவிட் தொற்றால் மரணிக்கும் சடலங்களை எதிர்க்க வேண்டும் என அப்போதிருந்த அரசாங்கம் விசேட நிபுணர்கள் குழுவை நியமித்து எடுத்த நடவடிக்கை, அரசியல் வரலாற்றில் முஸ்லிம் இனத்தவர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட மிகவும் மோசமான இனவாத செயற்பாடாகும்.

கோவிட் தொற்றால் மரணிக்கும் சடலங்களை நடக்கம் செய்ய முடியும் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்திருந்த நிலையில் அரசாங்கம் எரிப்பதற்கு எடுத்த தீர்மானம் மிகவும் கீழ்த்தரமான செயல்.

எமது நாட்டின் முஸ்லிம் மக்களின் உரிமையை மீறி இவ்வாறு சடலங்களை எரிக்க எடுத்த தீர்மானம் அடிப்படை உரிமையை மீறும் செயல். இது ஓர் இனத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை. இந்த நடவடிக்கைக்கு எதிராக அப்போது இருந்து அரசாங்கத்தின் மிக மோசமான இந்த தீர்மானத்துக்கு எதிராக ஆரம்பமாக வீதிக்கு இறங்கி போராடியது ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியாகும்.



அதனால் நாட்டின் ஓர் இனத்துக்கு மாத்திரம் எதிராக திட்டமிட்டு, இனவாதமாக செயல்படும் வகையில் கோவிட் தொற்றில் மரணித்தவர்களை எரிக்க வேண்டும் என தீர்மானம் மேற்கொண்டவர்கள் யார் என்பதை தேடிப்பார்த்து, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதியை கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

# சுதந்திரக் கட்சியின் அதிகாரம் எம் வசமே!

## கூறுகிறார் மகிந்த அமரவீர

கொழும்பு, ஜூன் 19

"நாட்டில் விரைவில் புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் பட்சத்தில் சிறி லங்கா சிறி லங்கா சுதந்திரக்கட்சி கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையை பெறுவார்கள்" என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக் கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சுதந்திரக்கட்சியின் அதிகாரம் தற்போது எம்வசமே காணப்படுகின்றது.

கட்சியை நாம் பலமிக்க கட்சியாக மீண்டும் கட்டியெழுப்புவோம்.எமது கட்சி சார்பாக ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக முன்னிலையாக போவதாக எவர் கூறினாலும் அது அவர்களது உரிமையாகும். ஆனால் ஏனைய கட்சியினரின் ஒத்துழைப்பு எமக்கு தேவையில்லை.

நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடுவதற்கு நாம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவோம். நாட்டில் அடுத்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவருக்கு நாமும் ஒத்துழைப்பு வழங்கியவர்களாகவே இருப்போம்.

ஜனாதிபதி தேர்தல் இடம் பெற்ற புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் பட்சத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் சுதந்திரக்கட்சி கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும் பான்மையாக காணப்படுவர்- என்றார்.

(அ)

# மிஹிந்தலை ரயில் பாதை மக்களிடம் கையளிப்பு!

கொழும்பு, ஜூன் 19

இந்திய கடன் உதவியின் கீழ் அனுராதபுரத்திலிருந்து மிஹிந்தலை சந்தி வரையான புதிய ரயில் பாதை மற்றும் இலங்கை ரயில்வே திணைக்களத்தினால் நவீனப்படுத்தப்பட்ட மிஹிந்தலை ரயில் பாதை என்பன மக்களிடம் கையளிக்கப் பட்டுள்ளன.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் இது இடம்பெற்றுள்ளது

அதன்படி மஹவ ஓமந்த திட்டத்தின் நான்கு கட்டங்களின் கீழ், இந்திய கடன் திட்டத்தினால் புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ள ரயில் பாதையின் தூரம் 1.8 கிலோமீற்றர் மற்றும் அதற்காக செலவிடப்பட்ட தொகை 220 மில்லியன் ரூபாவாகும்.

இதில் இரண்டு பாலங்கள் அடங்கும் என்றும் மற்றும் மின்தலயா ரயில் நிலையம், மிஹிந்தலை சந்தி துணை நிலையம், சமகிபுர மற்றும் அசோகபுர ரயில் நிலையங்கள் ஆகியவை அடங்கும் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

(அ)

# அரச வைத்தியசாலைகள் மீதான மக்களின் நாட்டம் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 19

பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கை மக்கள் பெரும்பாலும் அரச வைத்தியசாலைகள் மற்றும் வெளிநோயாளர் பிரிவுகளில் மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நாட்டம் காட்டுவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது "நாட்டின் பிரஜை ஒருவர் வருடத்திற்கு சுமார் ஆறு தடவைகள்



வைத்தியசாலைக்கு வருகை தந்து மருத்துவ சேவையினைப் பெற்றுக் கொள்கின்றார்.

முதியோர்களை அதிகளவில் கொண்ட நாடாக இலங்கை காணப்படுகின்றது. பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கை மக்கள் பெரும்பாலும் வைத்தியசாலைகள் மற்றும் வெளிநோயாளர் பிரிவுகளில் மருத்துவ சேவைகளைப் பெற நாட்டம் காட்டி வருகின்றனர்.

எனவே வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பலப்படுத்தப் பட்டால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதை குறைக்கலாம்.

மேலும் சிகிச்சை காலத்தை அதிகரிப்பதன் ஊடாக நோயாளர்களின் எண்ணிக்கையை குறைக்கலாம்" இவ்வாறு விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

# தேங்காய் எண்ணெய் விலையை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 19

"சந்தையில் தேங்காய் எண்ணெயின் விலையை அதிகரிப்பதற்கு நியாயமான காரணங்கள் எதுவும் இல்லை" என தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் ரொஷான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு மே மாதம் வரை 42,000 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட இரு மடங்கு அதிகமாகும்.

நாட்டில் நுகர்வுக்கு போதுமான தேங்காய் எண்ணெய் உள்ளதால், தேங்காய் எண்ணெயின் விலையை உயர்த்துவதற்கு எந்த வகையிலும் அனுமதி அளிக்க முடியாது என ரொஷான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சந்தையில் தேங்காய் எண்ணெயின் விலையை கட்டுப்படுத்தும் வகையில் புதிய வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் ரொஷான் பெரேரா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கடந்த சில மாதங்களில் மட்டும் 182 இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 19

கடந்த சில மாதங்களில் மாத்திரம் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் 182 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், அவர்கள் வந்த 24 மீன்பிடி படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம், நெடுந்தீவுக்கு அப்பாற்பட்ட கடற்பரப்பில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது, அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட நான்கு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# நாட்டில் வறுமையை ஒழிக்க விவசாயப் புரட்சி வேண்டும்!

## கோருகிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஜூன் 19

கிராமங்களில் வறுமையை ஒழிக்க விவசாயப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்றும் அதற்காகவே விவசாய நவீனமயப்படுத்தல் திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உறுமய தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், மகாவலி வளவ வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 45,253 பேரில் 1,524 பேருக்கு, எம்பிலிபிட்டி மகாவலி விளையாட்டரங்கில் காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உறுமய திட்டத்தின் காணிகளை வழங்க வேண்டியவர்களுக்கு அடுத்த இரு மாதங்களில் காணிகளை பெற்றுக்கொடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளேன்.

நாட்டில் 75 வருடங்களாக இவ்வாறு காணி உறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. தற்போது சட்டபூர்வமாகவே அந்த உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு வகையான புரட்சியாகும்.

விவசாயிகளுக்கு காணி உறுதிகளை வழங்கியது போலவே கொழும்பு மக்களுக்கு அடுக்கு மாடி குடியிருப்புக்களின் வீட்டு உரிமைகள் வழங்கப்படும். அதனால் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் பேருக்கு வீட்டு உரிமை கிடைக்கும்.

விவசாய மக்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் இந்த உறுமய வேலைத்திட்டம் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

கிராமங்களில் வறுமையை ஒழிக்க விவசாயப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். அதற்காகவே விவசாய நவீனமயப்படுத்தல் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆம் திருத்தத்தைப் பயன்படுத்தியே தேர்தலில் வெற்றி பெற சஜித் முயற்சி!

## நிமல் சிறிபால டி சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன் 19

“13 ஆம் திருத்தத்தைப் பயன்படுத்தியே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச முயற்சிக்கின்றார்” என அமைச்சர் நிமல்சிறிபால டீ சில்வா தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் நிமல்சிறிபால டீ சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தேர்தலை இலக்கு வைத்து சஜித் பிரேமதாச வடக்கிற்கு சென்று பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

சிறு பிள்ளைகளை அதாவது 10 லட்சம் ரூபாவுக்கு பாடசாலை மாணவர்களுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்குவதன் ஊடாக தமது அரசியல் பிரசாரத்தை மேற்கொண்டுவருகின்றார்.

தேர்தலில் வெற்றிபெறுவதற்காக 13 ஆவது திருத்தத்தை புற்றி பேசுகின்றார். அதனை பயன்படுத்தியே தேர்தலில் வாக்குப்பெற்று கரைசேர எண்ணுகின்றார்.

ஆனால் நாம் 13 ஆம் திருத்தத்தை காரணம் காட்டி தேர்தல் பிரசார பணிகளை நாம் மேற்கொள்ளவில்லை. கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களின் அடிப்படையிலேயே நாம் செயற்படுகின்றோம் இந்த நாட்டில் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான முகாமைத்துவ திட்டங்கள் எம்மிடம் உள்ளன-என்றார். (அ)



# தனியார் பஸ் சாரதிகள் நேற்று பணிப்புறக்கணிப்பு!

கொழும்லு, ஜுன் 19

டயகம தொடக்கம் தலவாக்கலை வரை சேவையில் ஈடுபட்டுவந்த அனைத்து தனியார் பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் நேறறு காலை முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக டயகம நகர் தொடக்கம் மன்றாசி, ஹோல்புருக், திஸ்பன சந்தி வழியாக மெராயா ஊடாக நுவரெலியாவுக்கும், நாகசேனை, மற்றும் லிந்துலை வழியாக தலவாக்கலைக்கு பயணிக்கும் தனியார் போக்குவரத்துச் சேவை ஸ்தம்பிதம் அடைந்தது.

அதேநேரத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் சேவையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

மிக நீண்டகாலமாக டயகம நகரிலிருந்து லிந்துலை நகரம் வரை சுமார் 23 கிலோமீற்றர் தூர பிரதான வீதி செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகிறது. இவ் வீதியின் சீர்திருத்தம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் தாமதப் போக்கை கடைப்பிடித்து வருகின்றனர்.

இந்நிலையில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கைகளை முன் வைத்து இவ் வீதி ஊடாக தனியார் போக்குவரத்து சேவையை புறக்கணித்துள்ளதாக தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# மின் கட்டணத் திருத்தம் ஜுலை 15 இல் அறிவிப்பு



கொழும்பு, ஜுன் 19

2024 ஆண்டின் இரண்டாவது மின் கட்டண திருத்தம் ஜுலை 15 ஆம் திகதி அறிவிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உத்தேச மின் சாரக் கட்டண திருத்தம் தொடர்பில் பொதுமக்களின் எழுத்துமூலமான கருத்துக்கள் ஜுலை 8ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் வாய்மூலமான கருத்துக்கள் ஜுலை 9ஆம் திகதி நடைபெறும் என அவர் குறிப்பிட்டார்.

இந்த கட்டண திருத்தத்தில் மின் கட்டணம் குறைக்கப்பட உள்ளதுடன் அதன்படி குறைக்கப்பட்ட சதவீதங்கள் ஜுலை 15ம் தேதி அறிவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# நாட்டில் சடுதியாகக் குறைந்த குழந்தை பிறப்பு எண்ணிக்கை!

கொழும்பு, ஜுன் 19

நாட்டில் கடந்த 5 வருடங்களில் குழந்தை பிறப்புகள் 100,000 இக்கும் அதிகமாகக் குறைந்துள்ளதாக மகப்பேற்று விசேட வைத்தியர் சனத் லெனரோல் தெரிவித்துள்ளார்.

மகப்பேற்று விசேட வைத்தியர்களினால் கடந்த 5 வருடகாலங்களைக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் போதே இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 2017 ஆம் ஆண்டு நாட்டில் 325,000 குழந்தைகள் பிறந்துள்ளதாகவும் ஆனால், 2023 ஆம் ஆண்டு 247,000 ஆக இந்த எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, 2017 ஆம் ஆண்டு வருடாந்த மரணம் 146,000 ஆக பதிவாகியுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டு 181,000 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, கர்ப்பமடையும் திருமண வயதுடைய இளைஞர் யுவதிகள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமையினாலேயே குழந்தை பிறப்புகள் இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பொருளாதார நெருக்கடியினால் குடும்பம் ஒன்றில் கருத்தரிப்பை மட்டுப்படுத்தல் மற்றும் குழந்தை பெற்றுக்கொள்வதை ஒத்திவைப்பதும் குழந்தை பிறப்பு வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடியினால் கடந்த 5 வருடங்களில் திருமணம் செய்துகொள்வது 12.5 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், வேலை செய்வோர் குறைவடைவதுடன், முதியோர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என மகப்பேற்று விசேட வைத்தியர் சனத் லெனரோல் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# கோட்டாபயவின் பாவத்தில் ரணிலும் பங்காளியானார்

## முஜிபுர் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 19

கோட்டபய ராஜபக்‌ஷ மற்றும் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் பாவத்தின் பங்காளியாக ஜனாதிபதியாக செயல்படுகிறார். பொதுஜன பெரமுனவின் தவறை தூய்மைப்படுத்தும் நடவடிக்கையில் இவர் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றிய போது தெரிவித்தவை வருமாறு,

கோவிட் பெருந்தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல் தகனம் செய்யப்பட்டமை குறித்து ஜனாதிபதி பேசியிருந்தார். துறைசார் நிபுணர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கு அமையவே உடல்கள் தகனம் செய்யப்பட்டதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தில் உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தினரின் ஜனாஸாக்களை தகனம் செய்ய வேண்டாம், சுகாதார அறிவுறுத்தலுக்கு அமைய நல்லடக்கம் செய்யுங்கள் என்று அப்போதைய ஜனா திபதி கோட்டபாய ராஜபக்‌ஷவிடம் பலமுறை வலியுறுத்தினோம்.

இவ்விடயம் குறித்து ஆராய்வதற்கு தொழில்நுட்ப குழுவும், துறைசார் நிபுணர்களின் குழுவும் நியமிக்கப்பட்டது. தொழில்நுட்ப குழுவில் தலைவராக கோட்டாவுக்கு நெருக்கமான சன்ன பெரேரா என்பவர் நியமிக்கப்பட்டார்.

இந்த குழுக்களின் மீது நம்பிக்கை இல்லை ஆகவே துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவை நியமியுங்கள் என்று அப்போதைய ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம். இதற்கமைய கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடாதிபதி ஜெனிபா பெரேரா தலைமையில் துறைசார் குழு நியமிக்கப்பட்டது.

சர்வதேச சுகாதார தாபனம் முன்வைத்துள்ள பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைய உடல்களை அடக்கம் செய்யலாம் என்று இந்த குழு அறிக்கை சமர்ப்பித்தது.

ஆனால் கோட்டபய ராஜபக்‌ஷவும், அவரது அமைச்சரவையும் கவனத்திற் கொள்ளவில்லை. இனவாத ரீதியில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்கினார்.

உலக சுகாதார தாபனம் சமர்ப்பித்த அறிவுறுத்தல்களை புறக்கணித்து முஸ்லிம் சமூகத்தினர் பழிவாங்கப்பட்டார்கள். தற்போது ஜனாதிபதி தொழில்நுட்ப குழுவின் தீர்மானம் என்று குறிப்பிட்டு பொதுஜன பெரமுனவை தூய்மைப் படுத்த முயற்சிக்கிறார். பொதுஜன பெரமுனவின் ஆதரவில் இருப்பதால் இவரும் பாவத்தில் ... (ஐ)

# கொள்கை அடிப்படையிலேயே நாட்டை முன்னேற்ற முடியும்!

## அநூப பஸ்குவெல் கூறுகிறார்

கொழும்பு, ஜுன் 19

நாட்டு மக்களின் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்ட சீர் திருத்தங்களை தற்போதைய அரசாங்கம் வெற்றிகரமாக மேற்கொண்டு வருவதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அநூப பஸ்குவெல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொள்கைகளின் அடிப்படையிலேயே நாட்டை முன்னேற்ற முடியுமே தவிர தனிநபர்கள் அல்லது கட்சிகளினால் அதனைச் செய்ய முடியாது எனவும் அத்தோடு, சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 50 வீத நிவாரணம் வழங்க ஜனாதிபதி அனுமதியளித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பலரும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தினை ஏற்றுக் கொண்டுள்ள போது, சிலர் மாத்திரம் அதற்குப் புறம்பாகச் செயற்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

யார் எவ்வாறான அறிக்கைகளை வெளியிட்டாலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் கொண்டுவரப்பட்ட சீர் திருத்தங்கள் வெற்றி அடைந்துள்ளது உண்மை எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, அரசாங்கம் நலன்புரித் திட்டங்களை ஆரம்பித்தபோது 35 வீதமாக இருந்த வட்டி விகிதம் இன்று 12 வீமாகக் குறைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையில் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண 50 சதவீத நிவாரணத்தை வழங்க ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளதுடன், அதற்கு 1.2 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளதுடன், பெண்கள் வலுவூட்டலுக்கான ஆணைக்குழு ஒன்றும் அமைக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அநூப பஸ்குவெல் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பொது வேட்பாளர் விவகாரத்தை குழப்பும் முயற்சியில் எமது தலைவர்களும்

## ஈ. பி. ஆர். எல். எவ். வேதனை

வவுனியா, ஜூன் 19

**ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ் பொது வேட்பாளர் என்னும் எண்ணகரு மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துவரும் நிலையில் அதனைக் குழப்புவதற்கு தென்னிலங்கை அரசியல் சக்திகளுடன் எமது மக்கள் தலைவர்களும் கரம் கோத்திருப்பது வேதனையளிக்கிறது என்று ஈழமக்கள் மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எவ்.) செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 34வது தியாகிகள் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


மேலும், இலங்கையின் தேசிய இனப்பிரச்னைய்ய தோற்று வித்தவர்கள் சிங்கள - பௌத்த மேலாதிக்கவாதிகளாக இருப்பினும் அன்றைய பூகோள அரசியல் சூழலில் அதற்கு எண்ணெய் ஊற்றி இனவாதத் தீயை அணையாமல் பார்த்துக்கொண்டது ஏகாதிபத்திய சக்திகள் என்பதை சரியாக இனங்கண்டு ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிரான புரட்சிகர அமைப்புகளுடன் கரம் கோர்த்து ஈழ மக்களின் நண்பர்களையும் எதிரிகளையும் சரியாக அடையாளம் காட்டினார். அதன் காரணமாகவே ஏகாதிபத்திய சக்திகளின் சூழ்ச்சிகளால் ஐக்கியம் சிதைக்கப்பட்டு, எது தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று தஞ்சம் அடைந்தோமோ அதே தமிழகத்தில் எமது செயலாளர் நாயகத்துடன் பதின்மூன்று தோழர்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்னை தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டதன் விளைவே எமது செயலாளர் நாயகத்தின் மறைவுக்குக் காரணமாக அமைந்தது.

ஆயுதப் போராட்ட எழுச்சியின் விளைவே இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்படுவதற்கும் மாகாண சபை உருவாகுவதற்கும் காரணமாக அமைந்தது. மாகாண சபை முறைமையை எப்படியாவது சீர்குலைத்துவிடவேண்டும் என்பதில் சிங்கள - பௌத்த பேரினவாதமும் ஏகாதிபத்திய சக்திகளும் கங்கனம் கட்டி செயற்பட்டன. இதன் பின்விளைவுகளை எமது சமூகம் நன்கு அனுபவித்துள்ளது.

அவருடைய திசைவழியில் நின்று தொலைநோக்குச் சிந்தனையுடன் இன்று எமது உரிமைகளை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ள தேர்தல் ஜனநாயகத்தின் ஊடாக எமது உரிமைகளை அடைவதற்கான சூழலை ஏற்படுத்த விரும்புகின்றோம். அந்த முயற்சியில் எமது தலைவர் தோழர் க.பிரேமச்சந்திரனின் தொலைநோக்குப் பார்வையில் உருவான ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ் பொது வேட்பாளர் என்னும் எண்ணகரு மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துவரும் நிலையில் அதனைக் குழப்புவதற்கு தென்னிலங்கை அரசியல் சக்திகளுடன் எமது மக்கள் தலைவர்களும் கரம் கோர்த்திருப்பது வேதனையளிக்கிறது.

இன்று அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், கனடா, பிரித்தானியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் இலங்கையின்மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கும் தென்பகுதி ஜனாதிபதி வேட்பாளர்கள் நாட்கணக்கில் வடக்கில் தங்கியிருந்து தமது பிரசாரத்தை மேற்கொள்வதற்கும் தமிழ் பொதுவேட்பாளர் எண்ணக்கருவும் ஒரு காரணம் என்பதை மக்கள் புரிந்துகொண்டுள்ள நிலையில் அதனை வலுப்படுத்துவதற்கு அனைத்து அரசியல் தலைமைகளும் இதயசுத்தியுடன் ஒன்றிணைய வேண்டும் என்று அறைகூவல் விடுக்கின்றோம் - என்றார். (ஐ)



# திருக்குடும்ப கன்னியர்மடத்தில் யோக விழிப்பூட்டல் செயலமர்வு!

யாழ்ப்பாணம், ஜூன் 19

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவு கழகமும் யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத்துறை பிரிவினரும் இணைந்து யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் யோகவிழிப்பூட்டல் செயலமர்வு நடைபெற்றது.

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் யோகா பயிற்சியும் வழங்கப்பட்டது. இதில் பெருமளவான பாடசாலை மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இவர்களுடன், அதிபர், ஆசிரியர்களும் பங்கேற்றனர். யாழ். நீரிழிவு கழகத்தினரும் இதில் பங்கேற்றனர்.

யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் தினமும் காலையில் யோக பயிற்சி நெறி நடைபெற்று வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விலங்குகளை வேட்டையாடி விற்பனை செய்தவர் கைது!

கொழும்பு, ஜூன் 19

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோத துப்பாக்கி மூலம் விலங்குகளை வேட்டையாடி விற்பனையில் ஈடுப்பட்ட ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தளம் - வண்ணாத்தி வில்லு பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் வண்ணாத்தி வில்லு கரடிப்புவல் பகுதியைச் சேர்ந்தவ 54 வயது நபர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் துப்பாக்கியை பயன்படுத்தி காட்டு விலங்குகளை வேட்டையாடி விற்பனை செய்து வந்துள்ளார். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (ஐ)



# மன்னார் முஸ்லிம்களுக்கு இந்திய அரசாங்கம் உதவி!

மன்னார், ஜூன் 19

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த ஆதரவற்ற 150 குடும்பங்களுக்கு யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகம் உலர் உணவு பொருட்க ளை வழங்கி வைத்தது.

நோன்பு பெருநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்த உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், துணைத் தூதுவர் சாய் முரளி, ஆர் நாகராஜன், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் இணைப்பா ளர் பாரிஸ், மன்னார் மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் சுல் பிகார் ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்வில் பங்கேற்ற இந்திய துணைத் தூதுவர்,வரும் நாட்களில் மேலும் பல பொது நலத் திட்டங்களை நடத்துவதற்கும் சமூக ஈடுபாட்டை மேம்படுத்தவும் இந்திய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் என்றார்.

இதன்போது, இந்திய அரசின் உதவிகளுக்காக முஸ்லிம் சமூகத்தினர் நன்றிகளை தெரிவித்தனர். (ஐ)

# மூதாட்டியை கட்டிவைத்து கொள்ளை!

வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் இருவர் மூதாட்டியை கட்டிவைத்துவிட்டு பெறுமதியான பொருட்களை கொள் ளையிட்டு தப்பிச் சென்றனர்.

மூதாட்டி தனிமையில் இருந்த தருணம் கத்தியுடன் நுழைந்த இருவர் அவரை கட்டிவைத்துவிட்டு, அங்கிருந்து தொலைக்காட்சி, கைபேசி, பணம், நகை என்பவற்றை கொள்ளையிட்டு தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று களுத்துறை - வாதுவையில் இடம்பெற்றது. (ஐ)

# அரசமைப்பில் பௌத்தத்துக்கு முதன்மை; தமிழ் தலைவர்கள் கைவைக்க முடியாது!

## லண்டனில் கூறினார் அநுரகுமார

லண்டன், ஜூன் 19

பௌத்த மத அடிப்படையில் வாழ்வது தேசிய மக்கள் சக்தி மாத்திரமே. அரசமைப்பின் 9ஆவது சரத்தில் கைவைக்கும் உரிமை தமிழ் அரசியல் தலைவர்களுக்கு இல்லை என அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

ஜே. வி. பியின் அரசியல் கூட்டணியான தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது. அண்மையில் லண்டன் சென்ற அவர் அங்கு நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றினார்.

அதில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் அரசமைப்பின் 9 ஆவது சரத்தில் பௌத்த மதம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் இரத்து செய்யப்படாது எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி மற்றும் பௌத்த மதம் இரண்டிற்கும் இடையே மோதல்களை உருவாக்குவது மத அடிப்படையில் வாழாதவர்களே என அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் பௌத்த மதத்திற்கான அவதானங்கள் குறைவடையும் என பரவும் பேச்சுக்கள் தொடர்பில் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

எங்களுடைய எதிர்த் தரப்பினருக்கு எங்களை பற்றிய அவதூறான கருத்துக்களை பரப்புவது வேலையாக மாறியுள்ளது. மத அடிப்படையில் வாழ்வது தேசிய மக்கள் சக்தி மாத்திரமே. இது தொடர்பில் சொல்லப்படும் அவதூறான கருத்துக்கள் மிகவும் தவறானவை.

அரசமைப்பின் 9ஆவது சரத்தில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் ஒருபோதும் இரத்து செய்யப்படமாட்டாது. 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையில் இலங்கையில் அரசமைப்பை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடல் நடைபெற்றது. அந்த கலந்துரையாடல்களில் தலைமை வகித்தவர் அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க.

அந்த கலந்துரையாடலில் அரசமைப்பின் 9ஆவது சரத்தை மாற்றுவது குறித்து கலந்துரையாடப்படவில்லை. அனைவரும் 9ஆவது சரத்தை ஏற்று கலந்துரையாடினர். அதனால் இது தேவையற்ற ஒரு அச்சம். 9ஆவது சரத்தில் கைவைக்க மாட்டோம். அதில் கைவைக்க வேண்டிய தேவை தமிழ் அரசியல் தலைவர்களுக்கு கூட இல்லை", என்றார்.

இலங்கையின் அரசியலமைப்பின்படி, 9ஆவது சரத்தில் இலங்கை குடியரசில் பௌத்த மதத்துக்கு முதன்மை தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தலும் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மதுபானசாலையை எதிர்த்து மக்கள் போராட்டம்

மூதூர், ஜூன் 19

திருகோணமலை மூதூர் இருதயபுர பிரதேசத்தில் அண்மையில் திருந்து வைக்கப்பட்டுள்ள மதுபானசாலையின் அனுமதியை உடனடியாக இரத்துச் செய்யுமாறு கோரி நேற்றுக் காலை மூதூர் மணிக்கூட்டு கோபுரச்சந்தியில் ஆரம்பிக்கப்பட்டு மூதூர் பிரதேச செயலகம் வரை பேரணி இடம்பெற்றது. இதில் சர்வமதத் தலைவர்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள், பெண்கள் மற்றும் இருதயபுர பொதுமக்கள் பங்குபற்றுதலுடன் இந்த கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் மூதூர் பிரதேச செயலாளருக்கு பொது மக்கள் சார்பாக மதுபானசாலையை மூடுமாறும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. (எ)





# பொது வேட்பாளர் வெற்றி பெற அனைவரின் ஆதரவும் அவசியம்

## ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவிப்பு

மண்முனைப்பற்று, ஜூன் 19

**ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை தெரிவுசெய்து அவரை அனைவரும் ஒன்றிணைந்து ஆதரிப்பதன் மூலமே வெற்றிக்கான வாய்ப்பு அதிகம் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.**



மட்டக்களப்பு - மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாளங்குடாவில் புனரமைக்கப்பட்ட வீதி திங் கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதியுதவியுடன் தாளங்குடா கடற்கரை வீதி சுமார் 92 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்த நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் இன்று எந்தக் கட்சியுமே பலமான நிலையில் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை தெரிவு செய்து அனைத்து கட்சிகளும் ஆதரிக்கும்போது சக்தி வாய்ந்த தலைவர் ஒருவரை இந்த நாட்டில் தெரிவு செய்ய முடியும்.

யார் ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதற்கு 51 சதவீதமான வாக்குகள் தேவையாகவுள்ளன. அவ்வாறு வாக்குகளைப்பெறும் நிலை இன்றைய கால கட்டத்தில் சாத்தியமில்லை. எந்தக் கட்சியாலும் 51 வீதமான வாக்குகளை தனித்துப் பெற முடியாது. அது மிகவும் போட்டியாகவே இருக்கும்.

அதனால் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அனைவரும் இன்றிணையும்போது வெற்றிக்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளது- என்றார்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் இணைப்புச் செயலாளர் பூ. பிரசாந்தன், மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் தட்சணா கௌரி தினேஷ் உட்பட பலர் கலந்துகொண்டனர். (எ)



# திருமலை முன்பள்ளி சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

திருகோணமலை, ஜூன் 19

திருகோணமலை மாவட்டத்தில் மிகவும் கஷ்டமான சூழலில் கல்வி கற்கும் சிறார்களுக்கு கற்றல் உபகரணம் மற்றும் புத்தகப் பைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

காப்போம் அமைப்பு ஒழுங்கு செய்திருந்த இந்த நிகழ்வில் நன்கொடையாளர்களான அவுஸ்திரேலியாவில் வசிக்கும் அஜந்தா குடும்பத்தினர் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றிய முன்பள்ளி சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களையும் புத்தகப்பைகளையும் முன்பள்ளிக்குத் தேவையான உபகரணங்களையும் வழங்கி வைத்தனர். (எ)

# ரூ. 16 மில். செலவில் நிர்மாணித்த சுகாதார நிலையம் திறந்துவைப்பு

மூதூர், ஜூன் 19

திருகோணமலை மூதூர் பெரியபாலத்தில் 16 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிராமோதய சுகாதார நிலையத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத் தார்.



இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துகோரல உட்பட அரச அதிகாரிகளும் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)



# பாதயாத்திரை குழுவினருக்கு பழரசம் வழங்கிய முஸ்லிம்கள்

அட்டாளைச்சேனை, ஜூன் 19


யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் 37 ஆவது நாளில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அட்டாளைச்சேனையில் பயணித்த போது முஸ்லிம்கள், பாதயாத்திரை குழுவினருக்கு பழரசம் வழங்கினர்.


நேற்றுக் காலை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் பாதயாத்திரை குழுவினர் தரிசனம் செய்தனர்.

அங்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் கி. ஜெயசிறில் குடும்பத்தினர் அடியவர்களுக்கு காலை ஆகாரம் வழங்கினர்.

மேலும் பல அடியவர்களுக்கு பாலமுனை அட்டாளைச்சேனை அக்கரைப்பற்று போன்ற இடங்களில் சென்று காலை ஆகாரம் வழங்கினர். (எ)

# முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மாதிரி சித்திரை புத்தாண்டு விழா





கல்முனை, ஜூன் 19

இனங்களுக்கு இடையில் சமாதானத்தையும் புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் இரண்டு மாணவர்களின் மாதிரிச் சித்திரைப் புத்தாண்டு விழா பாடசாலை அதிபர் ஏ. ஜி. எம். றிசாத் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் அதிபர் எஸ். கலையரசன், சிறப்பு விருந்தினர்களாக அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. ஜே. எல். பாஸில், கல்முனை பொலிஸ் நிலையத்தின் சிறுவர், பெண்கள் பிரிவு பொறுப்பதிகாரி ஏ. எம். எச். சீ. அபேரட்ண ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாதிரி சித்திரைப் புத்தாண்டு விழா மூலம் இந்து, பௌத்த, இஸ்லாமிய, மற்றும் கிறிஸ்தவ மதத்தவர்களின் கலை, கலாசாரங்கள், உடை மற்றும் உணவு வகைகள் என பல வகையான விடயங்களை மாணவர்கள் அறியக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்துவதோடு பிற மதங்களை மதிக்கும் மனப்பாங்கினையும் ஏற்படுத்துகின்றன என்று இந்த நிகழ்வில் பங்கேற்ற விருந்தினர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்தோடு சிறார்கள் இடையே போட்டிகள் மற்றும் விளையாட்டுக்களும் இடம்பெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை விருந்தினர்கள் வழங்கினர். (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அணு ஆயுதங்கள் அதிகரிப்பு

## பாகிஸ்தானை முந்தியது இந்தியா
## சுவீடன் ஆய்வறிக்கையில் தகவல்



ஜெனிவா, ஜூன் 19

**உலக அளவில் தற்போது பயன்படுத்தக்கூடிய நிலையிலுள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. இதில் சீனா வசம் சுமார் 500 அணு ஆயுதங்கள் இருப்பதாகவும் பாகிஸ்தானை விட இந்தியா விடம் அணு ஆயுதங்கள் அதிகம் உள்ளதாகவும் சுவீடன் நிறுவனமான ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.**

இந்த ஆய்வு அறிக்கையில் உலக நாடுகளின் வசமுள்ள அணு ஆயுதங்கள் குறித்த தகவல்கள் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், வட கொரியா, இஸ்ரேல் ஆகிய ஒன்பது உலக நாடுகள் அணு ஆயுத சக்தியை கொண்டுள்ளன. அந்த வகையில் இந்த நாடுகளின் வசமுள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்களை ஆண்டு தோறும் ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிடுவது வழக்கம். அந்த வகையில் நடப்பு ஆண்டுக்கான ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில் இந்தியாவின் கைவசம் உள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை 172 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஜனவரி மாத கையிருப்பின் தகவல். பாகிஸ்தான் வசமுள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை 170 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 இல் இந்தியா தனது அணு ஆயுதங்களை விரிவு செய்ததாகவும், இதற்கு நவீன முறையைப் பின்பற்றியதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. நீண்ட தூரத்திலுள்ள இலக்கை எட்டும் வகையில் அணு ஆயுதம் சார்ந்த மேம்பாடுகளை இந்தியா மேற்கொண்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

உலகளவில் ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் வசம் அணு ஆயுதங்கள் அதிகம் உள்ளன. மேலும், உலகின் ஒட்டுமொத்த அணு ஆயுத கையிருப்பில் சுமார் 90 சதவீதத்தை இந்த இரண்டு நாடுகளும் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுடன் ஒப்பிடும் போது சீனாவின் வசம் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை சற்று குறைவாகவே உள்ளது.

கடந்த ஓராண்டில் உலக நாடுகளின் வசம் ஒட்டுமொத்தமாக அணு ஆயுதங்களின் எண்ணிக்கை சுமார் 13 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்காக கடந்த ஓராண்டில் மட்டும் உலக நாடுகள் சுமார் 91. 3 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளன. இதில் கடந்த ஆண்டில் மட்டும் இந்தியா சுமார் 2. 7 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது. முதலிடத்தில் உள்ள அமெரிக்கா 51. 5 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது. சீனா 11. 9 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது.

உலக அளவில் தற்போது பயன்படுத்தக்கூடிய நிலையிலுள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை 9,585 ஆகும். இதில் சீனா வசம் சுமார் 500 அணு ஆயுதங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை 410 என இருந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

# 100 இராணுவத்தினர் கொன்று குவிப்பு!

## கிளர்ச்சி குழு மூர்க்கத்தனம்

நைஜர், ஜூன் 19

நைஜரில் எல்லையருகே அமைந்துள்ள மன்சிலா பகுதியில் நடந்த தாக்குதலில், ஏராளமான வீடுகள், இராணுவ முகாம்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இதில் 100 இராணுவத்தினர் கொன்று குவிக்கப்பட்டனர்.

ஆபிரிக்க நாடான புர்கினா பாசோவில் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. இதனை எதிர்த்து அங்கு பல்வேறு கிளர்ச்சிக் குழுக்கள் செயல்படுகின்றன. மேலும் அவர்கள் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்துதல், பொதுச் சொத்துகளை சேதப்படுத்துதல் என அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். எனவே, கிளர்ச்சியாளர்களை கட்டுப்படுத்த அரசாங்கம் போராடி வருகிறது. இதன் ஒரு பகுதியாக இராணுவத்தினர் தீவிர ரோந்துப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

இந்த நிலையில் நைஜர் நாட்டின் எல்லையருகே அமைந்துள்ள மன்சிலா பகுதியில் செவ்வாய்க்கிழமை மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தினர். அப்போது ஏராளமான வீடுகள், இராணுவ முகாம்கள் அடித்து நொறுக்கப்பட்டன. பின்னர் இராணுவத்தினர் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தினர். இதில் 100இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். இந்தத் தாக்குதலுக்கு அல் - கொய்தா அமைப்புடன் தொடர்புடைய ஜமாஸ் நுஸ்ரத் உல் - இஸ்லாம் வா அல் - முஸ்லிமின் என்ற கிளர்ச்சிக் குழு பொறுப்பேற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக அரசு தரப்பில் இதுவரை அறிக்கை வெளியிடப்படவில்லை. எனினும், கிளர்ச்சிக் குழுவுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிகிறது. இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.(எ)

# அபுதாபி இந்து கோவிலுக்கு படையெடுக்கும் பக்தர்கள்

அபுதாபி, ஜூன் 19

அபுதாபி இந்து கோவிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்தை எட்டியுள்ளது.

இதேவேளை, ஹஜ் விடுமுறை காலத்தில் பக்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அபுதாபி இந்துக் கோவில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளவை வருமாறு,

அபுதாபியில் உலகளாவிய நல்லிணக்கத்துக்கான ஆன்மீக சோலை என போற்றப்படும் மணற்கல் ஆலயம் உலகம் முழுவதிலும் இருந்து பார்வையாளர்களை ஈர்த்து வருகிறது. இதில் கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி முதல் நடப்பு ஆண்டின் ஜூன் 14 ஆம் திகதி வரை பதிவு செய்யப்பட்ட பக்தர்கள் மற்றும் பார்வையாளர்களின் புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி கோவில் திறக்கப்பட்டு இதுவரை வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்தை எட்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மத்திய தரைக்கடலில் இரு படகுகள் விபத்து

## 11 அகதிகள் மரணம்! 64 பேர் மாயம்

ரோம், ஜூன் 19

தெற்கு இத்தாலியில் மத்திய தரைக்கடல் பகுதியில் இரண்டு படகுகள் விபத்துக்குள்ளானதில் 11 அகதிகள் உயிரிழந்தனர். 64 பேர் காணாமல் போயுள்ளனர்.

இதனை, ஜேர்மன் தொண்டு நிறுவனம், இத்தாலிய கடலோர காவல்படை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அமைப்பு என்பன உறுதிப்படுத்தியுள்ளன.

ஜேர்மன் உதவிக் குழுவின் நாதிர் மீட்புக் கப்பல் இத்தாலிய தீவான லம்பேடுசாவுக்குச் சென்று கொண்டிருந்தபோது அங்கு படகு ஒன்று விபத்துக்குள்ளாகியிருப்பது தெரியவந்துள்ளது.

விபத்துக்குள்ளாகி மூழ்கி கொண்டிருந்த படகிலிருந்து 51 பேரை மீட்டதோடு, அதில் மயக்கமடைந்த இருவர் உட்பட கப்பலின் கீழ் தளத்தில் 10 உடல்கள் சிக்கியிருந்ததாக ஜேர்மன் உதவிக் குழு தெரிவித்துள்ளது.

உயிர் பிழைத்தவர்கள் இத்தாலிய கடலோர காவல்படையிடம் ஒப்படைக்கப்பட்டு திங்கட்கிழமை காலை கரைக்கு கொண்டு வரப்பட்டனர்.

அந்த படகில் சிரியா, எகிப்து, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து அகதிகளை ஏற்றிக்கொண்டு லிபியாவில் இருந்து படகு சென்றுள்ளது.

இதேவேளை, இத்தாலியின் கலாப்ரியாவில் இருந்து கிழக்கே சுமார் 200 கிலோ மீற்றர் (125 மைல்) தொலைவில் துருக்கியிலிருந்து புறப்பட்ட இரண்டாவது படகு தீப்பிடித்து கவிழ்ந்துள்ளது.

அந்த படகிலிருந்த 64 பேர் கடலில் காணாமல் போயுள்ளதோடு, 11 பேரை இத்தாலிய கடலோர காவல்படையினர் மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். அதில், பெண் ஒருவர் உயிரிழந்தார்.

விபத்துக்குள்ளான இரண்டாவது படகில் ஈரான், சிரியா மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் இருந்து அகதிகள் சென்றுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

# போர் அமைச்சரவை திடீரென கலைப்பு!

## இஸ்ரேல் பிரதமர் நடவடிக்கை



டெல் அவிவ், ஜூன் 19

முக்கிய உறுப்பினர்கள் திடீரென விலகியதால் இஸ்ரேல் போர் அமைச்சரவையை கலைத்தார் அந்த நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு.

காஸா மீதான போர் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்க அனைத்து கட்சிகள் அடங்கிய ஆறு பேர் கொண்ட போர் அமைச்சரவை அமைக்கப்பட்டிருந்தது.


காஸாவை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும், இஸ்ரேலுக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடிக்கிறது. இந்த மோதலின் உச்ச கட்டமாக, ஹமாஸ் அமைப்பினர் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் இஸ்ரேல் நாட்டுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர்.

இதற்குப் பதிலடியாக ஹமாஸ் அமைப்புக்கு எதிராக போர் பிரகடனம் செய்து காஸா மீது தாக்குதல் நடத்தி வருகிறது இஸ்ரேல். காஸா மீதான தாக்குதல் இஸ்ரேலின் முழு ஒத்துழைப்பு மற்றும் சம்மதத்துடன் நடைபெற வேண்டும் என பிரதமர் நெதன்யாகு விரும்பினார். இதனால் போர் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்க அனைத்து கட்சிகள் அடங்கிய ஆறு பேர் கொண்ட போர் அமைச்சரவை அமைக்கப்பட்டது. இதற்கு நெதன்யாகு தலைமை தாங்கினார்.

இந்த நிலையில் போர் அமைச்சரவை கலைக்கப்பட்டதாக இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்தனர். இதில் அங்கம் வகித்த முன்னாள் ஜெனரல் பென்னி கான்ட்ஸ் மற்றும் காடி ஐசன்கோட் ஆகியோர் வெளியேறிய நிலையில் நெதன்யாகு இந்த முடிவை எடுத்துள்ளார். (எ)

# அமெரிக்காவில் காட்டுத் தீ 3,600 ஏக்கர் எரிந்து நாசம்

## 1, 200 பேர் வெளியேற்றம்



கலிபோர்னியா, ஜூன் 19

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் லாஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டி பகுதியில், கோர்மன் என்ற இடத்தில் பயங்கர காட்டுத்தீ பரவியது.

[illegible] வேகமாக பரவியது. தீயில், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் எரிந்து நாசமடைந்தன. இதன்படி, 3,600 ஏக்கர் (5. 6 சதுர மைல்கள்) நிலங்கள் தீயில் கருகின. இதன் தொடர்ச்சியாக, கோர்மன் பகுதிக்கு உட்பட்ட ஹங்ரி வேலி பகுதியிலிருந்து 1,200 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

இந்த காட்டுத்தீயானது, பிரமிட் லேக் பகுதியை நோக்கி தென்கிழக்காக பரவி வருகிறது. காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் நெருக்கடிக்குள் அரசமைப்பு பேரவை!

## ரணில்மீது பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 19

**சட்டமா அதிபரின் பதவி காலத்தை நீடிப்பது குறித்து தீர்மானம் எடுக்கும் பொறுப்பு அரசமைப்பு பேரவைக்கு கிடையாது. அரசமைப்பு பேரவையை கடும் நெருக்கடிக் குள்ளாகும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயல்படுகிறார் என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.**



கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு,

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு விட்டோம் என அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால், பொருளாதாரம் இன்றும் கத்தி முனையில் தான் உள்ளது என சர்வதேச நாணய நிதியம் குறிப்பிடுகிறது. வங்குரோத்து நிலைக்குப் பின்னர் வெளிநாட்டுக் கடன் செலுத்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அரச முறை கடன் செலுத்தாத காரணத்தால் சேமிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு கையிருப்பைக் கொண்டு அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.ஆகவே, பொருளாதார நெருக்கடியிலிருந்து தற்காலிகமான ஓய்வு மாத்திரமே கிடைக்கப் பெற்றுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் எடுத்த தீர்மானங்களால் நடுத்தர மக்கள் மாத்திரமே பாதிக்கப்பட்டுள்ளனர். ஊழல் ஒழிப்பு குறித்து அரசாங்கம் பொறுப்புடன் செயல்படவில்லை. மக்களை நெருக்கடிக்குள்ளாகி அறவிடப்படும் வரி முறையாகப் பயன்படுத்தப்படுவதில்லை, பாதுகாக்கப்படுவதில்லை.

அரசமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்டோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். நிதி இல்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டதை போன்று ஜனாதிபதித் தேர்தலை பிற்போட முடியாது. இன்னும் 30 நாட்களில் தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பை வெளியிட வேண்டும்- என்றார். (எ)

# 69 இலட்சம் மக்களாணையை பலப்படுத்த ஒன்றிணைவோம்

## அழைக்கிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஜூன் 19

ராஜபக்ஷக்கள் மீதான நம்பிக்கையை ராஜபக்ஷக்களே இல்லாதொழித்துக் கொண்டனர். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைத்த 69 இலட்சம் மக்களின் ஆணையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.எனவே, பஸில் ராஜபக்ஷவின் காட்டிக் கொடுப்பு வெற்றி பெறக்கூடாது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சர்வஜன சக்தி காரியாலயத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

2019 ஆம் ஆண்டு பெரும்பான் மையின் மக்கள் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர். அரச தலைவர் 69 இலட்ச மக்களாணைக்கும் அபிலாஷைகளுக்கும் முரணாகச் செயல்படும் போது மக்கள் போராட்டம் தீவிரமடைந்தது.

அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்தை ஒரு தரப்பினர் தமது குறுகிய அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டனர். மக்கள் போராட்டத்தின் அதிஷ்டலாபம் 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் புறக்கணிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைத்தது.

கோட்டாபய ராஜபக்ஷ 69 இலட்சம் மக்களாணையை அவமதித்து விட்டு தப்பிச் சென்ற காரணத்தால் அந்த மக்களின் அரசியல் அபிலாஷைகளை எம்மால் மறக்கவோ மறுக்கவோ முடியாது. ஏனெனில் 69 இலட்சம் மக்களாணையை தோற்றுவிக்க நாங்கள் முன்னிலை வகித்தோம்.

இடைக்கால ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க 69 இலட்சம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்க முடியாது. அதே போன்று ராஜபக்ஷக்கள் தலைமையிலான பொதுஜன பெரமுன மீதும் நம்பிக்கை கொள்ள முடியாது.

69 இலட்சம் மக்களாணையை பாதுகாக்கும் வகையில் 2019 ஆம் ஆண்டு ஒன்றிணைந்த மக்கள் அலையை மீண்டும் ஒன்றிணைக்கவுள்ளோம்- என்றார். (எ)

# வெளிநாட்டில் தயாரித்த கைத்துப்பாக்கி பறிமுதல்

கொழும்பு, ஜூன் 19

இரண்டு கைத்துப்பாக்கிகள் மற்றும் இரண்டு மகசின்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.



விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஹங்வெல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு, அதே வீட்டில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் மற்றுமொரு நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 45 மற்றும் 55 வயதுடையவர்கள் எனவும் மேலதிக விசாரணைகளுக்காக ஹங்வெல்ல மற்றும் ஹொரணை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் அதிரடிப் படையின் கூறினர். (எ)

# கிராம உத்தியோகத்தர்கள் தொடர் வேலை நிறுத்தம்!

கொழும்பு, ஜூன் 19

எதிர்வரும் 24 ஆம் திகதி தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட நேரிடும் என இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க அறிவித்துள்ளார்.

அத்தோடு, எதிர்வரும் 24 ஆம் திகதி ஜனாதிபதி காரியாலயத்தில் தங்களது பிரச்னைகள் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுகள் நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையில், தற்பொழுது சட்டப்படி வேலை என்ற தொழில்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சம்பளம் மற்றும் கொடுப்பனவு போன்றவற்றை மறுசீரமைத்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை கிராம உத்தியோகத்தர்கள் முன்வைத்துள்ளனர்.

இதனடிப்படையில், நபர் ஒருவரின் மரணத்தின் போது வழங்கப்படும் ஆவணங்கள் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

எனினும், கிராம சேவை சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை.

மேலும், பேச்சுகள் தோல்வியடைந்தால் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் [illegible] எச்சரிக்கை விடுத்துள்ளார். (எ)

# 2022 - 2024 வரையான காலத்தில் அதிகளவு சட்டங்கள் உருவாக்கம்

## வரலாற்றில் பதியப்படும் என்கிறார் ரணசிங்க

கொழும்பு, ஜூன் 19

இலங்கையில் அதிகளவில் சட்டம் தயாரிக்கப்பட்ட ஆண்டுகளாக 2022 - 2024 வரையான காலப்பகுதி வரலாற்றில் பதியப்படுமென நீதி, சிறைச்சாலை அமைச்சின் செயலாளர் எம். என். ரணசிங்க தெரிவித்தார்.



2022 ஆம் ஆண்டு முதல் 59 சட்ட சீர்திருத்தங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதோடு, 7 சட்டமூலங்களும் 44 திருத்தச் சட்டங்களும் எதிர்வரும் நாட்களில் நிறைவேற்றப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஒவ்வொரு அமைச்சுக்களினதும் சட்டங்களைத் தயாரிப்பதில் நீதி அமைச்சு பெரும் பங்காற்றுவதாகவும், 2022 ஆம் ஆண்டில் 273 சட்ட வரைவுகளும், 2023 ஆம் ஆண்டில் 299 சட்ட வரைவுகளும் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"நீதி, சிறை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்த அமைச்சு [illegible] இரண்டு ஆண்டுகளில் [illegible] சீர்திருத்தங்கள் தொடர்பாக பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. இந்தக் காலப்பகுதி வரலாற்றில் இடம் பிடிக்க வேண்டியதாகும்.

எமது அமைச்சின் விடயப்பரப்புக்கு அமைய, 2022 இல் - 29, 2023 இல் - 17, 2024 இல் - 13 என இதுவரை 59 சட்டச் சீர்திருத்தங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் 7 வரைவுகள் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இன்னும் 44 மிக முக்கியமான சட்டத் திருத்தங்களுக்கான பணிகள் கிட்டத்தட்ட முடிவடையும் தருவாயில் உள்ளன. ஒவ்வொரு அமைச்சின் சட்டங்களை வகுப்பதிலிலும் நீதி அமைச்சு பெரும் பங்காற்றுகிறது.

அதன்படி, சட்ட வரைவுத் திணைக்களம், மற்றைய அமைச் சுக்களுக்காக 2022 ஆம் ஆண் டில் 273 சட்ட வரைவுகளை யும், 2023ஆம் ஆண்டில் 299 சட்ட வரைவுகளையும் மும்மொ ழிகளிலும் தயாரித்துள்ளது.

நீதித்துறையை செயல்திறன் மிக்கதாக மாற்றுவதன் மூலம் மக்கள் வழக்குகளை விரைவாக நிறைவு செய்ய முடியும். வழக்கு தொடர்பான சொத்துக்களை பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாம். மேலும் நல்ல முதலீட்டுச் சூழல் உருவாகி வருகிறது. எனவே, சட்டத்தின் தாமதத்துக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் நேரடி தொடர்பு இருப்பது தெளிவாகிறது.

2017 ஆம் ஆண்டில் சட்ட விவகாரங்களுக்கான துறைசார் மேற்பார்வைக் குழு வழங்கிய அறிக்கையின்படி, ஒரு குற்றவியல் வழக்கை முடிக்க பொதுவாக 17 ஆண்டுகள் ஆகும். பல்வேறு ஆய்வுகளின்படி, ஒரு நிலம், பகிர்வு மற்றும் கணக்கீட்டு வழக்கை முடிக்க ஒரு தலைமுறைக்கு மேல் ஆகும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றுவதற்குத் தேவையான செயல்பாடுகளைத் திட்டமிட்டுள்ளோம்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஐ.நா...

எதிர்வரும் ஜூலை 12ஆம் திகதி வரை பெறவுள்ளது.

இதேவேளை, இலங்கை தொடர்பான விவகாரம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள 57 ஆவது கூட்டத்தொடரிலேயே எடுத்துக் கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஐ)

### இரண்டு...

யாப்பா அபேவர்த்தன சபையில் வாசித்தார்.

அந்த வியாக்கியானங்களில்,

இலங்கை தொலைத்தொடர்பு திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்று உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

“பாலின சமத்துவம்“ சட்டமூலத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாத ஆதரவுடன் சர்வசன வாக்கெடுப்பும் அவசியம் என்று தெரிவித்துள்ளது. (ஐ)

### பௌத்த...

உரையாற்றினார்.

அவரின் உரையில்,

உத்தேச வாடகை வருமான சட்டம் அதிக வாடகை வருமானம் ஈட்டுவோருக்கு மாத்திரமே. ஒவ்வொரு நபரினதும் முதல் சொத்து, இந்த வாடகை வரியிலிருந்து விடுவிக்கப்படும் அதே நேரம், சாதாரண வருமானம் ஈட்டும் மக்களிடத்தில் இந்த வரி அறவிடப்பட மாட்டாது.

சபாநாயகர் பாலின சமத்துவ சட்டம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சபையில் அறிவித் தார். இந்தத் தீர்ப்பு பெண்களின் உரிமைகளுக்கும் பௌத்த மதத்தின் பாதுகாப்புக்கும் சவாலாகவும் பிரச் னைக்கு உரியதாகவும் அமையலாம்.

இது அரசமைப்பின் 4ஆவது பிரிவின் கீழான இந்த சபையின் அதிகாரங்களை மீறுவதாகும். எனவே, அதுகுறித்து ஆராய தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

### சஜித்...

போட்டியிடுவதற்கு நாங்கள் தயார் என ஏற்கனவே அறிவித்திருக்கும் தம்பி சிவாஜிலிங்கத்துக்கும் சகோதரி அனந்திக்கும் நிச்சயமாக இந்த வாய்ப்புகிட்டாது. பொது வேட்பாளராக போட்டியிடுவதற்கு நாங்கள் எதிர்பார்க்கும் தராதரத்தின் அடிப்படையில் பலர் தயாராக இருக்கிறார்கள். இந்த விடயத்தில் சரியான நேரத்தில் - சரியான தீர்மானங்களை நாங்கள் மேற்கொள்வோம். சிவாஜிலிங்கத்துக்கும் அனந்திக்கும் இப்போது இந்த விடயம் தேவையற்றதொன்று.

தம்பி சுமந்திரன் பொது வேட்பாளர் விடயத்தை முற்றுமுழுவதுமாக எதிர்க்கிறார். அதற்குக் காரணம் உண்டு. சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரிப்பதற்கு அவர் தலைமையிலான அணி முடிவெடுத்து விட்டது. அது எப்போதோ முடிந்த விடயம். அதனை நான் உறுதியாகக் கூறுவேன். இந்த விடயத்தில் தலைவர் சம்பந்தன் இப்போது ஒரு செல்லாக்காசு. அவரால் எதையும் செய்யமுடியாது என்பதை நான் எப்போதோ அறிந்து கொண்டுவிட்டேன்.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் நிச்சயமாக தமிழ் மக்களுக்கு ஒரு சாதகமான முடிவையே தரும். அந்த நேரத்தில் நண்பர் சுமந்திரன் எங்கிருப்பார் என்பது எனக்குத் தெரியாது - என்றும் கூறினார்.

சிறிகாந்தா பங்கேற்ற ஸ்பொட்லைற் நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு டான் தமிழ்ஒளி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### சவால்களை...

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளனத்தால் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட் டது. போராட்டத்தின் நிறைவில் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் இந்திய துணைத் தூதுவரை சந்தித்து மனுவை கையளித்தனர். இதன்போதே துணைத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்த சந்திப்பில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் குறித்து துணைத் தூதரகம் விடுத்த செய்திக் குறிப்பில்,

மீனவர் சமூகம் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியின்போது இந்திய அரசு வழங்கிய ஆதரவுக்கு நன்றி தெரிவித்தனர். வட மாகாணத்தில் மீனவர்களைப் பாதிக்கும் பிரச்னைகள் குறித்து அவர்கள் கவலைகளை எழுப்பினர் மற்றும் தங்களின் கஷ்டங்களை போக்குமாறு துணைத் தூதரகத்திடம் வடக்கு மீனவர் பிரதிநிதிகள் முறையிட்டனர்.

இவர்களுக்கு பதிலளித்த துணைத் தூதுவர், இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இந்திய அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளை எடுத்துரைத்தார். மீனவர் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை தீர்ப்பதற்கு தொடர்ந்து ஆதரவையும் ஒத்துழைப்பையும் உறுதியளித்தார். இப்பகுதியில் உள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், பகிரப்பட்ட கவலைகளை நிவர்த்தி செய்யவும் இரு தரப்பு ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார் - என்றுள்ளது. (ஐ-01)

### யாழ்.இந்திய...

சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மருதடி சந்தியில் இருந்து கடற்றொழிலாளர்கள் பேரணியாக இந்திய துணைத் தூதரகத்துக்கு சென்று - அங்கு நின்றவாறு "இலங்கை கடற்படையே நிறுத்து நிறுத்து அத்துமீறலை தடுத்து நிறுத்து", "கடற்தொழில் அமைச்சரே கண்ணை திறந்து பார்", "இந்திய அரசே எம்மையும் வாழ விடு", சிறீலங்கா பொலிஸே எங்களை தடுக்காதே", போன்ற கோஷங்களை எழுப்பினர்.

போராட்டத்தின் முடிவில் இந்திய துணைத் தூதுவரிடம் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் கோரிக்கை மனுவை கையளித்தனர். (ஐ)

### ஜனாஸா...

செய்வதை முதலில், அனைத்து நாடுகளும் நிறுத்தின. அதன் பிறகு, உலக சுகாதார நிறுவனத் திடம் இந்த விடயம் முன்வைக்கப்பட்டது. ஆனாலும் இலங்கையில் நாங்கள் ஒரு குழுவை நியமித்தோம். துரதிர்ஷ்டவசமாக, நாங்கள் அடக்கம் செய்ய அனுமதிக்கக் கூடாது என்று அந்தக் குழு பரிந்துரைத்தது. உலக சுகாதார நிறுவனம் வேறுபட்ட கருத்தை எடுத்தது.

ஆனால், பின்னர் உயர் நீதிமன்றம் அந்தக் குழுவின் பரிந்துரையை உறுதி செய்தது. எனவே, அதை அரசாங்கம் பின்பற்ற வேண்டியேற்பட்டது. அப்போது மாற்று வழி இருக்கவில்லை. ஆனால், இப்போது அவை அனைத்தும் முடிந்துவிட்டன.

இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதா அல்லது எரிப்பதா என்பதை தீர்மானிக்கும் உரிமை அனைவருக்கும் இருக்க வேண்டும். எனவே, இறந்தவரின் உடலை புதைக்கவோ, தகனம் செய்யவோ அல்லது மருத்துவ பீடத்துக்கு தானமாக வழங்கவோ உரிமை வழங்கும் சட்டத்தை இவ்விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் கொண்டு வரவுள்ளார்.

இந்த காலக்கட்டத்தில், முஸ்லிம் மக்களுக்குப் மனரீதியிலான பாதிப்புகள் ஏற்பட்டன. ஆனால், இறந்த பிறகு அடக்கம் செய்வதை விரும்பும் எனக்கு தெரிந்த இந்துக்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இவ்வாறு நடந்ததற்கு அரசாங்கம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (ஐ)

# ஒற்றையாட்சியை ஒழிப்பதற்கு தயாரா?

## ரணிலிடம் கேட்ட கஜேந்திரன்

கொழும்பு, ஜூன் 19

ஒற்றையாட்சியை ஒழித்து சமஷ்டி முறை அரசமைப்பை கொண்டுவர ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாரா? இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் சபையில் கேள்வி எழுப்பினார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றியிருந்தார்.

ஜனாதிபதியின் உரையின் பின்னர் எதிர் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி கேட்கவும் - கருத்துரைக்கவும் சபாநாயகர் சந்தர்ப்பம் வழங்கியிருந்தார்.

இதன்போது கருத்துரைத்த கஜேந்திரன் எம். பி.,

இன்றைய காலகட்டத்தில் இந்த நாட்டை பொருளாதார அழிவிலிருந்து மீட்டெடுப்பதற்காக பல முயற்சிகளை அவர் செய்து வருகிறார் என்று தொடர்ச்சியாக கூறிவருகின்ற நிலையில், இந்த நாட்டை பொருளாதார அழிவிலிருந்து மீட்டெடுப்பதற்கு செய்யப்பட வேண்டிய மிகப் பிரதானமான கடமை இருக்கின்றது என்பதனை ஜனாதிபதியின் மேலான கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

கடந்த 75 வருடங்களாக இலங்கையில் இனங்களுக்கு இடையில் உறவைச் சீர்குலைத்து துருவ மயப்படுத்தியிருக்கின்ற ஒற்றையாட்சி அரசியல் யாப்பு, இந்த நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்து நிலைக்குள் தள்ளியது.

இந்த ஒற்றையாட்சி அரசியல் யாப்பு, இந்த நாட்டின் உச்ச நீதிமன்றம் உட்பட சகல நீதிமன்றங்களையும் முடமாக்கியிருக்கின்ற ஒற்றையாட்சி அரசியலமைப்பு ஒழிக்கப்பட்டு தமிழ்த் தேசமும், சிங்கள தேசமும் சமமாக இந்த நாட்டின் முன்னேற்றத்தில் பங்கெடுக்கக்கூடிய சமஷ்டி அரசமைப்பு கொண்டுவரப்படுவதன் மூலம் மட்டுமே அந்த முன்னேற்றத்தை நிரந்தரமாக ஏற்படுத்த முடியும்.

ஒற்றையாட்சியை ஒழித்து சமஷ்டி அரசியல் யாப்பை கொண்டுவருவதற்கு ஜனாதிபதி தனது காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நாட்டின் தோல்விக்கு இந்த ஒற்றையாட்சி அரசியல் யாப்புத்தான் காரணம் என்பதனை ஏற்றுக் கொண்டு தமிழ்த் தேசமும் சிங்கள தேசமும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான ஒரு சமஷ்டி அரசமைப்பை கொண்டுவருவதற்கும் அதன் மூலம் தமிழ் மக்கள் இந்த நாட்டினுடைய அபிவிருத்தியிலும் இந்த நாட்டின் முன்னேற்றத்திலும் பங்கெடுத்து உலக வல்லரசு தரத்துக்கு இந்த நாட்டைக் கொண்டுவருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த சமஷ்டி அரசியல் யாப்பை கொண்டுவர ஜனாதிபதி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அவ்வாறான ஒரு சமஷ்டி அரசியல் யாப்பை கொண்டுவருவதற்கு அவர் தயாராக இருக்கின்றாரா? என்றார்.

அவரின் இந்தக் கேள்விக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்தப் பதிலையும் அளிக்கவில்லை. (ஐ)

# தொலைத்தொடர்பு திருத்த சட்டமூலம்: உயர்நீதிமன்ற தீர்ப்பு சபையில் அறிவிப்பு!

கொழும்பு, ஜூன் 19

இலங்கை தொலைத்தொடர்பு திருத்தச் சட்டமூலத்தின் மீதான உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபாநாயகர் நேற்று பாராளுமன்றில் அறிவித்தார்.

இந்த சட்டமூலத்தின் பல சரத்துக்கள் அரசியலமைப்பிற்கு முரணானவை என்றும் அவை பாராளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மையால் மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் அந்த சரத்துகள் திருத்தப்பட்டால் தனிப் பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# களனி கங்கை அருகே ஆண் ஒருவரின் சடலம்!

கொழும்பு, ஜூன் 19

கொழும்பு - பேலியகொடை, களனி கங்கை அருகே அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 50 முதல் 60 வயதுக்கு இடைப்பட்டவர் எனவும் 05 அடி 06 அங்குலம் உயரம் கொண்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் உயிரிழந்தவரின் சடலம் தற்போது கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், பேலியகொட பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### மகள்களின்...

தனது 13, 6 வயது மகள்களின் நிர் வாண ஒளிப்படங்கள் மற்றும் காணொலிகளையே பிறருக்கு விற்பனை செய்துள்ளார் என்று தெரிய வருகின்றது.

சிறுமிகளில் ஒருவர் தனது சிறிய தாயாருக்கு விவரத்தை வெளிப்படுத்தியதை அடுத்து, அவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாரின் விசாரணையில், சிறுமிகளின் ஒளிப்படங்கள், காணொலிகள் மட்டுமின்றி அந்தப் பெண்ணின் அந்தரங்க படங்களும் சிக்கின. இவற்றை அந்தப் பெண் பலருக்கும் அனுப்பியமையும் தெரிய வந்துள்ளது.

கைதான பெண் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரின் மனநலனை பரிசோதிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன், வழக்கு முடியும் வரை இரு சிறுமிகளையும் பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

### தமிழ்...

வழங்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது.

நாளைய சந்திப்பில் தமிழ் அரசு கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த. சித்தார்த்தன், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க. வி. விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் இந்த சந்திப்பில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த சந்திப்பில், தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வு, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் சமகால அரசியல் தொடர்பில் பேசப்பட வாய்ப்பு உள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சட்டமா அதிபரின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கான யோசனை நிராகரிப்பு!

கொழும்பு, ஜுன் 19

**சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணத்தின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கான யோசனை அரசியலமைப்பு சபையில் நிராகரிக் கப்பட்டுள்ளது.**

அதன்படி நேற்று பிற்பகல் அரசியலமைப்பு சபை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. ஜனாதிபதியின் பரிந்துரை தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டு இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்கு அரசியலமைப்புச் சபை உறுப்பினர்களுக்கு இடையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

அதன்படி, பரிந்துரைக்கு எதிராக 5 வாக்குகளும், ஆதரவாக 3 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அரசியலமைப்பு சபைக்கு தற்போதைய சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக் காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கும் யோசனை அரசியலமைப்புச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

அரசியலமைப்பு சபை இரண்டு தடவைகள் கூடியதுடன் இரண்டு சந்தர்ப்பங்களிலும் இந்த விடயம் தொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. அதன்படி இன்று குறித்த யோசனை நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணத்தின் பதவிக்காலம் இம் மாதம் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 10 லட்சம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிப்பு

கொழும்பு, ஜுன் 19

"10 லட்சம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது" என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் கவலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காகவே வாடகை வருமான வரி அறிவிடப்படுவதாக ஜனாதிபதி கூறுகின்றார். உள்நாட்டு தேசிய உற்பத்தி ஊடாக வருமானத்தை அதிகரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மக்கள் மீது வரி சுமைகளை அதிகரிப்பதன் மூலம் மேலும் நெருக்கடி நிலை ஏற்படும். இந்த நாட்டின் தனியார் துறை பணியாளர்கள் இரண்டு சந்தர்ப்பங்களில் வரி செலுத்துகின்றனர். அதேபோல் மின் கட்டணம் மற்றும் நீர்க் கட்டணம் அதிகரித்துள்ளமையினால் நாட்டு மக்கள் பல பிரச்னைகளை எதிர்கொண்டுள்ளனர்.

10 லட்சம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைக்கு மத்தியிலேயே இப்போது புதிதாக மேலும் வரி அறவிட தீர்மானித்துள்ளார்கள்.

ஜனாதிபதி இந்த நாட்டில் மேலும் ஆட்சியில் நீடிப்பதற்கு , ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சிலர் கூறுகின்றனர். நாட்டில் வரிசுமையை அதிகரிப்பதற்காகவே அவர்கள் அதனைக் கோருகின்றார்களா என்ற கேள்வியும் தற்போது எழுகின்றது - என்றார். (அ)

# 10 இலட்சம் பக்தர்கள் அநுராதபுரத்தில் திரள்வு

கொழும்பு, ஜுன் 19

பொசன் போயா தினத்தை முன்னிட்டு அநுராதபுரத்துக்கு 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தந்துள்ளனர் என்று அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பொசன் போயா வாரமானது நேற்று செவ்வாய்க் கிழமை ஆரம்பமானது. இதையொட்டி, எதிர்வரும் 24 ஆம் திகதி வரை அநுராதபுரத்தில் பௌத்த மத அனுஷ்டானங்கள் நடைபெறவுள்ளன.

இதேவேளை, பொசன் போயா தினத்தை முன்னிட்டு அநுராதபுரத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 4 ஆயிரத்து 500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தனர். (ஐ)

## மரண அறிவித்தல்

### தனபாலசிங்கம் தினகர்

(Tasty Cola நிறுவன உரிமையாளர்)

யாழ்ப்பாணம், இல. 17, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு - அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் தினகர் கடந்த 16.06.2024 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் - கோமளா தம்பதியரின் மூத்த மகனும் அகிலாவின் அன்புக் கணவரும் அனாஜினி, மோனிஷா, திவாகர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பாஸ்கரன், சுரேந்தர் மற்றும் டினோராஜ், தனுராஜ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாலையா, காலஞ்சென்றவரான அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம் மற்றும் இராசையா, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு பேரனும் ஷகிலா, நிகிலா, சர்மிலா, பிரமிலா, பாபுஜி, வினோத் மற்றும் காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், பாலகுமார், ஜெயா, ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (19.06.2024) புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு இலக்கம் 17, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

# புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 22 மில்லியனாக அதிகரிக்கும் வாய்ப்பு!

கொழும்பு, ஜுன் 19

உலகில் 18 மில்லியனாக இருக்கும் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டளவில் 22 மில்லியனாக அதிகரிக்கும் என இலங்கை புற்றுநோய் சங்கத்தின் கண்டி கிளையின் வைத்தியர் யோகா அந்தோனி தெரிவித்துள்ளார்.

புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றபோதிலும் விழிப்புணர்வினால் அதனை கணிசமான அளவில் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் கூறினார்.

கண்டி மாவட்ட செயலாளர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற புற்று நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

உலகில் 18 மில்லியனாக இருக்கும் புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டளவில் 22 மில்லியனாக அதிகரிக்கும் அவர் இதன்போது கூறினார்.

ஆண்களுக்கு பொதுவாகக் காணப்படும் வாய்ப் புற்றுநோய் வெற்றிலை உண்பதினால் ஏற்படுவதாகவும், புகைப்பிடிப்பதினால் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், மதுபானம் மற்றும் ஆரோக்கியமற்ற உணவுகளை கட்டுப்படுத்துவதன் மூலம் உணவுக்குழாய் மற்றும் குடல் தொடர்பான புற்றுநோய் பரவுவதை கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# நீதிமன்ற தீர்ப்பு குறித்து ஆராய பாராளுமன்றத் தெரிவுக் குழு!

கொழும்பு, ஜுன் 19

பாலின சமத்துவ சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்து ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப் பிரச்னையொன்றை எழுப்பி ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

பாலின சமத்துவ சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, பெண்களின் உரிமைகள், பௌத்த மதத்தின் பாதுகாப்பிற்கு சவாலாகவும் பிரச்னைக்குரியதாகவும் அமையலாம் என ஜனாதிபதி இதன்போது கூறினார்.

ஆகவே இது குறித்து, பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றின் ஊடாக ஆராயப்பட வேண்டுமென ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார். (அ)

# போராட்டங்களினால் தலைநகரில் பதற்றம்!

கொழும்பு, ஜுன் 19

புறக்கோட்டை மற்றும் பத்தரமுல்லையில் இன்று முன்னெடுக்கப்பட்ட இருவேறு போராட்டங்களின் போது, பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டனர்.

வேலையற்ற பட்டதாரிகளால் பாராளுமன்ற சுற்றுவட்டப் பாதைக்கு அருகில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சகல வேலையற்ற பட்டதாரிகளுக்கும் தொழில்வாய்ப்புக்களை அரசாங்கம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என போராட்டக்காரர்களால் வலியுறுத்தப்பட்டது.

பல்வேறு வாசகங்களையும் பதாகைகளை ஏந்தியும் இந்தப் போராட்டமானது மேற்கொள்ளப்பட்டது.

நாடளாவிய ரீதியாகவும் இருந்து நூற்றுக்கணக்கான வேலையற்ற பட்டதாரிகள் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தமையால், பாராளுமன்ற சுற்றுவட்டப் பாதை மற்றும் பாராளுமன்ற வளாகத்தில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இதன்போது பொலிஸாரின் அறிவித்தலையும் மீறி அங்கு போராட்டம் மேற்கொள்ளப்பட்டமையால், போராட்டக்காரர்கள் மீது பொல்துவ சந்தியில் வைத்து பொலிஸாரினால் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால், குறித்த பகுதியில் பதற்றமானதொரு நிலைமை ஏற்பட்டதோடு, போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டது.

அதேநேரம், பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களினால் நேற்று புறக்கோட்டையில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சொத்து வரியில் ஒரு வீட்டுக்கு மாத்திரமே வரி விலக்கு கிட்டும்!

## சபையில் அறிவித்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஜுன் 19

இலங்கையில் அடுத்த ஆண்டு அறிமுகமாகவுள்ள சொத்து வரியில், ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை வைத்திருப்போரில் ஒரு வீட்டுக்கு மாத்திரமே வரி விலக்கு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முற்பகல் ஆற்றிய விசேட உரையில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

சொத்துக்கள் மீதான வரி அமுலாக்கப்படும்போது ஒரு நபர் பல வீடுகளைக் கொண்டிருந்தால் அவற்றில் ஒரு வீட்டுக்கு மாத்திரமே வரிவிலக்கு வழங்கப்படும்.

இதன்மூலம் 90 சதவீதமானவர்களுக்கு வரி அமுலாக்கப்படாது.

எனவே இது தொடர்பாக நாட்டின் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என ஜனாதிபதி ரணில் தெரிவித்தார். (அ)

# வரியின்றிய வாகன இறக்குமதி சலுகை நிறுத்தப்படும் சாத்தியம்!

கொழும்பு, ஜுன் 19

வாகனங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதிக்கும் போது, தொழில் வல்லுநர்களுக்கு கடந்த காலங்களில் வழங்கப்பட்டு வந்த வரிச் சலுகையை இரத்துச் செய்வது குறித்து ஆராயப்பட்டு வருவதாக நிதியமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கு அமைவாக வாகன இறக்குமதி மீதான தடையை நீக்குவது குறித்து தற்போது அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

இதற்காக விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் வாகன இறக்குமதித் தடை முழுமையாக நீக்கப்படுமாக இருந்தால், தொழில் வல்லுநர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வரிச் சலுகையுடன் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு இடைநிறுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சாதாரணமாக வாகன இறக்குமதிக்கு 200 சதவீதம் வரையான வரியை ஏனைய தரப்பினர் செலுத்தும் போது, தொழில் வல்லுநர்கள் வரியின்றி வாகனம் ஒன்றை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.